
# கோபுரம்

தகவல் இதழ்

கார்த்திகை, 1994



குடமுழுக்குக் காணும்
முருகாமலை ஸ்ரீ கதிரேசப்பெருமான் ஆலயம்

இந்துசமய, கலாசார அலுவல்க்ள் திணைக்கள வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் அரங்கியற் கருத்தரங்கு



தமிழ் அரங்கியற் கருத்தரங்கினை கலாசார சமய அலுவல்கள் பிரதி அமைச்சர், பேராசிரியர் ஏ. வி. சுரவீர, பேராசிரியர் கா. சிவத்தம்பி, தமிழகப் பேராசிரியர் எஸ். இராமானுஜம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. கா. தயாபரன், திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண் முகலிங்கம் ஆகியோரையும் படத்திற் காணலாம்.

## விருது வழங்கல்




வெளிவிவகார அமைச்சர் மாண்புமிகு லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள், கலாநிதி சி. மௌனகுரு அவர்களுக்கு 'கலைச்செம்மல்' என்ற விருது வழங்குவதையும், கலாசார சமய விவகார அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. கா. தயாபரன், இந்துசமயத் திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் ஆகியோர் உடனிருப்பதையும் படத்திற் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கோபுரம்

இந்துசமய, கலாசார
திணைக்கள வெளியீடு

மலர்: 5 ❀ 1994 ❀ இதழ்: 3

பவ வருடம், கார்த்திகை மாதம்

## எண்ணம்

நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களுக்கேற்ப, கலாசார சமய விவகாரங்களுக்கென தனியாக ஒரே அமைச்சு உருவாக்கப்பட்டது. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இவ்வமைச்சின் ஓரங்கமாக இயங்கி வருகின்றது. வழமைபோலவே திணைக்களத்தின் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

அமைச்சின் அநுசரணையோடு திணைக்களம் ஒழுங்கு செய்த தமிழ்க் கலைவிழாவும் தமிழ் அரங்கியற் கருத்தரங்கும் அக்டோபர் 15ம் திகதி முதல் மூன்று தினங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

தமிழ் அரங்கியல் மரபும் மாற்றங்களும் என்ற கருத்தரங்கினை கலாசார, சமய விவகார பிரதி அமைச்சர் பேராசிரியர் ஏ. வி. சுரவீர அவர்கள் தொடக்கி வைத்தார். கருத்தரங்கிற்கென தமிழகத்தைச்சேர்ந்த ஐந்து நாடகவியலாளர்கள் கலந்து சிறப்பித்தனர். இலங்கை அறிஞர்கள், கலைஞர்கள் அனைவரும் இணைந்து பயன்மிக்க கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

முதல் நாள் மாலை கலை விழாவிற்கு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். அத்துடன் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த எழுத்தாளர், கலைஞர்கள் முப்பத்தொரு பேருக்கு அமைச்சர் பொன்னாடை போர்த்தி விருது வழங்கி வாழ்த்தினார்.

இரண்டாம் நாள் கலை விழாவிற்கு வர்த்தக வாணிபத்துறை பிரதியமைச்சர் திரு. பெ. சந்திரசேகரன் அவர்கள் பிரதம அதிதியாகவும், தபால் தந்தித் தொலைத் தொடர்புகள் பிரதியமைச்சர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா அவர்கள் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர். திணைக்களத்தின் மூலம் எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் ஊக்குவிக்கும் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

இம் முறை யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய எல்லா இடங்களிலும் இந்து சமயப்போட்டிகள் நடைபெற்றன. அறநெறிப் பாடசாலைகளிற் பயிலும் சுமார் எட்டாயிரம் மாணவ மாணவியர் இப்போட்டிகளிற் கலந்து கொண்டனர்.

இவ்விதழில் இவை பற்றிய செய்திகளும் வழமையான அம்சங்களும் இடம் பெற்றுள்ளன.

---

கோபுரம் பற்றிய வாசகர் கருத்துக்களை தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றோம்.

முகவரி: பணிப்பாளர்,
இந்துசமய, கலாசார அலுவல்கள்
திணைக்களம்
''காப்புறுதி இல்லம்'' 9ம் மாடி,
21, வொக்ஷோல் வீதி,
கொழும்பு - 02.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கலைவிழா - '94

கலாசார, சமய விவகார அமைச்சின் கீழ் இயங்கும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அக்டோபர் 15, 16, 17ம் திகதிகளில் தமிழ் அரங்கியற் கருத்தரங்கு, கலைவிழா, விருது வழங்கல் என்பன நடைபெற்றன.

**தமிழ் அரங்கியல் மரபும் மாற்றங்களும்**

தமிழ் அரங்கியல் மரபும் மாற்றங்களும் எனுந் தலைப்பிலான கருத்தரங்கின் தொடக்க வைபவம் அக்டோபர் 15ம்திகதி காலை கொழும்பு 7, விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள பொறியியலாளர் நிறுவன மண்டபத்தில் இடம் பெற்றது.

கலாசார சமய விவகார பிரதி அமைச்சர் பேராசிரியர் ஏ. வி. சுரவீர அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியைத்தொடக்கி வைத்ததோடு சிறப்புரையும் ஆற்றினார்; கலைவிழா மலரையும் அமைச்சர் வெளியிட்டு வைத்தார்.

அன்று பிற்பகல் தொடக்கம், 17ம் திகதி காலை வரை கருத்தரங்கின் ஆறு அமர்வுகள் இடம்பெற்றன.

தமிழகத்திலிருந்து பேராசிரியர் எஸ். இராமானுஜம், ஜே. ரங்கராஜன், என். முத்துசாமி, இரா. இராசு, ப்ரசன்னா இராமசாமி ஆகிய ஐந்து நாடகத்துறை விற்பன்னர்கள் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர் கா, சிவத்தம்பி, கலாநிதி



தமிழ் அரங்கியற் கருத்தரங்கில், பேராசிரியர் எஸ். இராமானுஜம் அவர்கள் உரை நிகழ்த்துவதையும், சபையில் கலாசார சமய விவகார பிரதி அமைச்சர் பேராசிரியர் ஏ.வி. சுரவீர, பேராசிரியர் கா. சிவத்தம்பி, பணிப்பாளர் க. சண்முகலிங்கம், பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. கா. தயாபரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்திற் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. மௌனகுரு, கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை, சில்லையூர் செல்வராஜன், டொமினிக் ஜீவா ஆகியோர் உட்பட நாட்டின் பல பாகங்களையுஞ் சேர்ந்த நாடகத் துறைக் கலைஞர்கள், இலக்கிய வாதிகள் ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வழங்கல் நிகழ்ச்சி என்பன 15ம்திகதி மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றன.

வெளிவிவகார அமைச்சர் மாண்புமிகு லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள் அன்று பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதோடு




தமிழ் அரங்கியற் கருத்தரங்கிற்கென தமிழகத்திலிருந்து வந்து கலந்து கொண்ட திரு. என். முத்துசாமி, டாக்டர். இரா. இராசு, திரு. ஜே. ரங்கநாதன், திருமதி ப்ரசன்னா இராமசுவாமி ஆகியோர் உரை நிகழ்த்துவதைப் படத்திற் காணலாம்.

ஆறு அமர்வுகளிலும், தமிழ் அரங்கியல் தொடர்பான பல்வேறு அம்சங்கள் ஆய்வு செய்யப்பட்டதோடு கலந்துரையாடல்களும் இடம் பெற்றன.

### கலையரங்கம், விருது வழங்கல்

முதல் நாள் கலையரங்கம், விருது விருது பெற்றோருக்கு பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌரவித்தார். அமைச்சரின் சிறப்புரையும் இடம்பெற்றது.

அன்றைய நிகழ்ச்சிகள் பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரி மாணவிகளின் தமிழ் வாழ்த்துடன் ஆரம்பமாகின. தொடர்ந்து பரதகலாநிதி, திருமதி சிவானந்தி ஹரிதர்ஷனின் நர்த்தனா கலைமன்ற மாணவியரின் நாட்டியவிருந்து, கலைச்செல்வி, நிர்மலா ஜோனின், நிர்மலாஞ்சலி, கலையகக் குழுவினரின் நாட்டியாஞ்சலி, கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் நாட்டியக் கலாமந்திர் மாணவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யரின் ''பரவசந்தரும் பரதக்கலை'' ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

**2ம் நாள் - கலையரங்கம்**

16ம் திகதி, மாலை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்ற இரண்டாம் நாட்கலைவிழா நிகழ்ச்சிகளுக்கு, பிரதி, வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் மாண்புமிகு பி. சந்திரசேகரன் அவர்கள் பிரதம அதிதியாகவும், பிரதி தபால் தந்தித் தொலைத் தொடர்புகள் அமைச்சர் மாண்புமிகு எம். ஹிஸ்புல்லா அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரி மாணவியரின் தமிழ்வாழ்த்துடன் அன்றைய நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. 'விஷாரத' செல்வன் சாரங்கன் ஸ்ரீரங்கநாதனின் சிதாரில் செவ்விசை, பண்டாரவளை, கலாஜோதி குமார இராமநாதன் குழுவினரின் மலையகப் பாரம்பரியக் கலைகள், மட்/விபுலாநந்த இசைநடனக் கல்லூரி மாணவர்களின் கிராமிய நடனம், கொழும்பு மலையாளக் கலாலயத்தினரின் 'முகங்கள்' நாடகம் என்பன இடம் பெற்றன.

கலாசார, சமய விவகார அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு.கா.தயாபரன் திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் ஆகியோரின் நெறிப்படுத்தலில், பிரதிப்பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர்கள் திரு. வீ. விக்கிரமராஜா, திரு. குமார் வடிவேல், திரு. ஏ. எம். நஹியா, திரு. எஸ். தெய்வநாயகம் ஆகியோரும் திணைக்கள உத்தியோகத்தர்களும், கலைவிழாவின் சிறப்பிற்குப் பணி செய்தமை குறிப்பிடத் தக்கது.

## தமிழ் அரங்கியற் கருத்தரங்கிற் கலந்து கொண்டு ஆய்வுரை, கருத்துரை வழங்கியோர் (தமிழகம்-இலங்கை)

(1) பேராசிரியர் எஸ் இராமானுஜம், அரங்கியற்துறைத் தலைவர் தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்.
(2) திரு. ஜே ரெங்கராஜன் ''வெளி'' நாடக இதழாசிரியர் சென்னை.
(3) திரு. என். முத்துசாமி கூத்துப்பட்டறை, நாடக இயக்குநர் சென்னை.
(4) டாக்டர் இரா. இராசு இணைப்பேராசிரியர் நாடகப்பள்ளி, புதுவைப் பல்கலைக் கழகம்.
(5) ப்ரசன்னா இராமசாமி பத்திரிகையாளர், விமர்சகர் சென்னை.
(6) பேராசிரியர் கா. சிவத்தம்பி, நுண் கலைத்துறைத் தலைவர், யாழ். பல்கலைக் கழகம்.
(7) கலாநிதி சி. மௌனகுரு நுண்கலைத்துறைத் தலைவர், கிழக்குப் பல்கலைக் கழகம்.
(8) கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை விரிவுரையாளர்,
(9) திருமதி அம்மன்கிளி முருகதாஸ் விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக் கழகம்.
(10) திரு. டொமினிக் ஜீவா பத்திரிகையாளர்.
(11) திரு. எஸ். ஜெய்சங்கர் விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்.
(12) திரு. க. ஸ்ரீகணேஷ், விரிவுரையாளர், பல்கலைக் கழக கல்லூரி வவுனியா.
(13) திரு. கே. எஸ். சிவகுமாரன் பத்திரிகையாளர், விமரிசகர்,
(14) திரு. எஸ் பாலசுகுமார் விரிவுரையாளர் கிழக்குப் பல்கலைக் கழகம்.
(15) திரு. மெற்றாஸ் மெயில் நடிகர், எழுத்தாளர்.
(16) திரு. சிவபாலன் நாடக இயக்குநர்.
(17) திருமதி கமலினி செல்வராஜன் நடிகை, ஒலிபரப்பாளர்.
(18) திரு. மாத்தளை கார்த்திகேசு நாடக இயக்குநர்.
(19) திரு. அந்தனி ஜீவா எழுத்தாளர், நாடக இயக்குநர்.
(20) திரு. ஜே. பி. றொபர்ட் நாடக இயக்குநர்.
(21) திரு. பிரான்ஸிஸ் ஜெனம் நடிகர், நாடக இயக்குநர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருது பெற்றோர் விபரம்

### கலைச் செம்மல்

| | | |
|---|---|---|
| 1. | திரு. எல். திலகநாயகம் போல், | யாழ்ப்பாணம். |
| 2. | கலாநிதி. சி. மௌனகுரு, | மட்டக்களப்பு. |
| 3. | திரு. எஸ். கே. பரராஜசிங்கம், | கொழும்பு - 5. |
| 4. | திருமதி. வாசுகி ஜெகதீஸ்வரன், | கொழும்பு - 6. |
| 5. | திருமதி. சிவானந்தி ஹரிதர்ஷன், | கொழும்பு - 6. |

### கலாஜோதி

| | | |
|---|---|---|
| 1. | திருமதி. பாலாம்பிகை நடராஜா, | கொழும்பு - 4. |
| 2. | திருமதி. லீலாவதி இரட்ணசிங்கம், | கொழும்பு - 8. |

### கலைச்சுடர்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி. நிர்மலா ஜோன், | கொழும்பு - 6. |

### கலைமணி

| | | |
|---|---|---|
| 1. | திரு. இ. பத்மநாதன், | கொழும்பு - 6. |
| 2. | திரு. எஸ் ஜி. கிருஷ்ணபிள்ளை, | தம்பிலுவில் 1. |
| 3. | திருமதி. ஹெலன்குமாரி இராஜசேகரன், | கொழும்பு - 13. |
| 4. | திருமதி. கமலஸ்ரீ மோகன்குமார், | கொழும்பு - 10. |
| 5. | திரு. கே. கதிர்காமத்தம்பி, | கொழும்பு - 4. |
| 6. | திரு. ஜே. சுகுமாரன் | லிந்துல. |
| 7. | திருமதி. சாந்தாவதி நாகையா, | மட்டக்களப்பு. |
| 8. | திரு. எம். ரி. எம். ஹுசைன் | கொழும்பு - 14. |
| 9. | திரு. சி. அழகுப்பிள்ளை, | வத்தளை. |
| 10. | திரு. பி. எம். லிங்கம், | நோர்வூட். |
| 11. | திருமதி. துவாரகா கேதீஸ்வரன், | வவுனியா. |

### தமிழ் ஒளி

| | | |
|---|---|---|
| 1. | திரு. சீ. கிருஷ்ணபிள்ளை, | மட்டக்களப்பு. |
| 2. | திருமதி. சித்தி சர்தாபி ஹசன், | கண்டி. |
| 2. | திரு. என். சோமகாந்தன், | கொழும்பு - 5. |
| 4. | திரு. எம். எச். எம். ஹலீம்டீன், | கல்ஹின்ன. |
| 5. | திரு. யு. எல். எம். அதீக், | கல்முனை. |

### தொடர்பியல் வித்தகர்

| | | |
|---|---|---|
| 1. | திரு என். சிவராஜா, | கொழும்பு - 6. |
| 2. | செல்வி. சற்சொருபவதி நாதன், | கொழும்பு - 4. |
| 3. | திருமதி. இராஜேஸ்வரி சண்முகம், | கொழும்பு - 12. |
| 4. | திரு. ஏ. ஐயாத்துரை, | கொழும்பு - 6. |
| 5. | திரு. எஸ் அருளானந்தம், | கொழும்பு - 13. |
| 6. | திரு. கே. நித்தியானந்தன், | கொழும்பு - 13. |
| 7. | திரு. அருணா செல்லத்துரை, | கொழும்பு - 8. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திணைக்களச் செய்திகள்

## கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் நிர்வாக அமைப்பு பற்றிய விளக்கம்

ஆகஸ்ட் மாதத்தில் நிகழ்ந்த பொதுத் தேர்தலின் பின், புதிய அமைச்சரவை பொறுப் பேற்றது. கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சிடம் இந்துசமய கலாசார அலுவல்கள் என்னும் விடயம் முன்னர் ஒதுக்கப்பட்டிருந்தது. புதிய மாற்றங்களின் பயனாக கலாசார சமய அலுவல்கள் அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதற்குப் பொறுப்பான அமைச்சராக மாண்புமிகு லக்ஷ்மன் ஜயக்கொடி அவர்களும், பிரதியமைச்சராக பேராசிரியர் ஏ. வி. சுரவீர அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கலாசார அமைச்சின் செயலாளராக திரு. டபிள்யூ. ஆர். பி. ராஜகருண அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னர் இராஜாங்க அமைச்சுக்கள், திட்ட அமைச்சுக்கள் என்னும் அமைப்புக்கள் இருந்து வந்தன. புதிய அமைச்சரவை மாற்றங்களின் பயனாக இராஜாங்க அமைச்சுக்களும், திட்ட அமைச்சுக்களும் நீக்கப்பட்டுள்ளன. தற்போது திணைக்களங்கள் யாவும் அமைச்சுக்கள் ஒவ்வொன்றின் கீழ் இணைக்கப்பட்டு அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றன.

இதுவே, இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் இருந்து வந்த அமைப்பு முறையாகும். இப்போது இம்முறை மீண்டும் பின்பற்றப்பட்டு வருகின்றது. கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் திணைக்களங்களும், ஏனைய சபைகளும் (கூட்டுத்தாபனங்கள், சபைகள்) கீழே தரப்பட்டுள்ளன.

1. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
2. இஸ்லாமிய சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.
3. தேசிய சுவடிகள் திணைக்களம்.
4. தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்.
5. கலாசார அலுவல்கள் திணைக்களம்.
6. அரும்பொருட் காட்சியகத் திணைக்களம்.
7. டவர் ஹோல் நிறுவனம்.
8. மத்திய கலாசார நிதியம்.
9. பொது ஆற்றுகை சபை (Public Performance Board)

இந்து சமய கலாசார அலுவல்களுக்காக மேலதிகச் செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னர் இந்துசமய கலாசார இராஜாங்கச் செயலாளராகக் கடமையாற்றிய திரு கா. தயாபரன் அவர்கள் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இஸ்லாமிய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் இதனைப் போன்றே விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திரு. எச். எம். ஜெமீல் அவர்கள் இத்திணைக்களத்தினை மேற்பார்வை செய்யும் பொறுப்புடைய மேலதிகச் செயலாளராகக் கடமையாற்றுகின்றார்.

புதிய சமய, கலாசார அலுவல்கள் அமைச்சர் பதவியேற்றதும் கலைக்கழகம், சாகித்திய மண்டலம் ஆகியவற்றின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. கலைக் கழகத்தில் பலவித ஆலோசனைக் குழுக்கள் செயற்படுவதற்கான ஏற்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. தமிழ் நாடகம், தமிழ் இலக்கியம், இசை, நடனம் ஆகிய துறைகளுக்கான குழுக்கள் புதிதாக நியமிக்கப்பட்டு அவற்றின் நடவடிக்கைகளுக்கு புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட திணைக்களங்களில் ஒன்றான கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் சிங்கள அகராதி, சிங்கள கலைக் களஞ்சியம், கலைக்கழகம், சாகித்திய மண்டலம் ஆகிய அமைப்புக்கள், செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. ஜோன் டீ சில்வா அரங்கமும், அதனோடு இணைந்த கலா பவனமும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினாலேயே பரிபாலிக்கப்பட்டு வருகின்றன.

## தமிழ் படைப்புகளுக்கான சாகித்தியப் பரிசு முடிவுகள்

*1992ம் ஆண்டில் வெளிவந்த தமிழ் இலக்கியப் படைப்புகளுக்கான ''சாகித்தியப் பரிசு'' முடிவுகளை திணைக்களம் வெளியிட்டுள்ளது.*

திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு பரிசுக்குரிய படைப்புக்களைத் தேர்வு செய்தது.

*1995ம் ஆண்டு ஜனவரி மாதம் கலாசார சமய அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்படவுள்ள தேசிய சாகித்திய விழாவில் சாகித்தியப் பரிசுகள் வழங்கப்படும்.*

சாகித்தியப் பரிசுக்குரிய படைப்புகள், மற்றும் படைப்பாளிகள் பற்றிய விபரம் வருமாறு:-

**நாவல்:** எழுத்தாளர் செ. யோகநாதன் எழுதிய 'கிட்டி' என்ற நாவல் பரிசினைப் பெறுகின்றது.

**நாடகம்:** எழுத்தாளர் அகளங்கன் எழுதிய 'அன்றில் பறவைகள்' என்னும் நூல் முதற்பரிசு பெறுகிறது. இந்நூலாசிரியரின் இயற் பெயர் நா. தர்மராஜா.

**சிறுகதை;** க. சட்டநாதன் எழுதிய 'உலா', எஸ். எல். எம். ஹனிபா எழுதிய 'மக்கத்துச் சால்வை' ஆகிய இரு நூல்கள் சிறுகதைத்துறைக்கான பரிசினைப் பகிர்ந்து கொள்கின்றன.

**கவிதை:** கவிஞர் இ.முருகையன் எழுதிய 'நாங்கள் மனிதர்' என்ற நூல் கவிதைக்கான பரிசினைப் பெறுகின்றது.

**இலக்கியத் திறனாய்வு;** கலாநிதி சி. மௌனகுரு எழுதிய 'பழையதும் புதியதும்' என்ற நூல் இலக்கியத் திறனாய்வு என்ற வகுதிக்கான பரிசினைப்பெறுகின்றது.

**சிறுவர் இலக்கியம்:** எழுத்தாளர் அம்பி எழுதிய 'கொஞ்சும் தமிழ்' எனும் நூல் சிறுவர் இலக்கியப் பரிசினைப் பெறுகின்றது. நூலாசிரியரின் இயற் பெயர் இ. அம்பிகைபாகன் ஆகும்.

**சமய மெய்யியற்துறை:** கலாநிதி க. அருணாசலம் எழுதிய 'சுவாமி விபுலானந்தரின் சமயச் சிந்தனைகள்' என்னும் நூல் இந்த வகுதிக்கான பரிசினைப் பெறுகின்றது.

**இட வரலாறும் பண்பாடும்:** ஏ. என். எம். ஷாஜஹான் எழுதிய 'புத்தளம் வரலாறும் மரபுகளும்' எனும் நூல் இவ்வகுதிக்கான பரிசினைப் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமய கலாசார திணைக்களத்தில் இந்து கலாசார நிதியம் என்ற அமைப்பு உள்ளது. இதனைவிட இத் திணைக்களம், இந்து சமயம், பண்பாடு, தமிழ் இலக்கியம், தமிழ்க் கலைகள் ஆகிய வற்றின் வளர்ச்சிக்காக பல திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது. இந்தத் திட்டங்கள் மேன் மேலும் விஸ்தரிக்கப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஈழத்துச் சித்தர்கள் – நூல் அறிமுகம்

திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆத்ம ஜோதி நா. முத்தையா அவர்கள் எழுதித் தொகுத்துள்ள ஈழத்துச் சித்தர்கள் எனும் நூலின் அறிமுக வைபவம் அக்டோபர் மாதம் 1ம் திகதி மாலை 4 மணிக்கு திணைக்களக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பண்டிதர் கா. செ. நடராசா அவர்கள் ''ஈழத்துச் சித்தர்களின் வாழ்வும் சிந்தனையும்'' எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

இந்நூல் 1980ம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நூல் என்பது குறிப்பிடத் தக்கது.

### வி. என். சிவராஜா நினைவுச் சொற்பொழிவு

திணைக்களத்தின் ஏற்பாட்டில் சைவத் தமிழ் அறிஞரும், முன்னாள் வடகிழக்கு மாகாண பிரதம செயலாளருமான அமரர் வி. என். சிவராஜாவின் முதலாண்டு நினைவுச் சொற்பொழிவு அக்டோபர் மாதம் 7ம் திகதி திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பேராசிரியர் சீ. சூரியகுமாரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தகவல், உல்லாசப் பயணத்துறை அமைச்சின் செயலாளர் திரு. என். சிவதாசன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தாஜி மஹராஜ் அவர்கள் 'இந்து மத நோக்கில் வாழ்க்கை' எனுந்தலைப்பில் உரைநிகழ்த்தினார்.

இந் நிகழ்ச்சியின் போது அமரர் சிவராஜா அவர்கள் எழுதிய ஆங்கில நூல் ஒன்றினை இலங்கை அபிவிருத்தி நிறுவகப் பணிப்பாளர் திரு. எம். சோமசுந்தரம் அவர்கள் வெளியிட்டு வைத்தார்.

### டாக்டர் ஐராவதம் மகாதேவன் கலந்துரையாடல்

தமிழக அறிஞரான டாக்டர் ஐராவதம் மகாதேவன் அவர்களுடனான சந்திப்பும், கலந்துரையாடலும் செப்டெம்பர் மாதம் 9ம் திகதி திணைக்களக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றன.

''வளரும் தமிழ் - இன்றைய தேவைகளும் பிரச்சனைகளும்'' எனும் தலைப்பில் இக் கலந்துரையாடல் இடம் பெற்றது.

திரு. மகாதேவன் அவர்கள் இந்திய நிர்வாக சேவை அதிகாரியாகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். கல்வெட்டின் ஆய்வுகள், தமிழ் எழுத்தின் வளர்ச்சி, ஆகிய துறைகளில் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியவர். 1987ம் ஆண்டு முதல் 1991ம் ஆண்டு வரை தமிழ்நாடு 'தினமணி' நாள் இதழின் பதிப்பாசிரியராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல்

செப்டெம்பர் 23ம் திகதி மாலை திணைக்களக் கேட்போர் கூடத்தில் தமிழகப்பேராசிரியர் எம். ஆர். அடைக்கலசாமி அவர்கள் 'திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல்' என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிகழ்ச்சிக்கு திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார்.

### தலவிருட்ச நடுகையும் சூழல் பாதுகாப்பு பற்றிய சொற்பொழிவும்

இந்துசமய, கலாசார திணைக்களத்தின் அநுசரணையுடன் வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலயத்தில் செப்டெம்பர் 21 காலை 'சூழல் பாதுகாப்பு' பற்றிய சொற்பொழிவுகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் இடம் பெற்றன. உயர்தர வகுப்பு மாணவர்களும் றோயல் கல்லூரி ஆசிரியர் திரு. கே. நந்தகுமார் அவர்களும் இச்சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். இந்நிகழ்ச்சியில் திணைக்கள பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர், உதவிப்பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர். வித்தியாலய அதிபர் திருமதி ஜி. பாலச்சந்திரன் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். தலவிருட்சமும் நட்டு வைக்கப்பட்டது.

### யோகக்கலையும் பயிற்சியும்

இந்துசமய, கலாசார திணைக்களப் பணிப்பாளர் திரு.க. சண்முகலிங்கம் தலைமையில் 9வது மாடி கேட்போர் கூடத்தில் 'யோகக்கலையும்,பயிற்சியும்' பற்றிய கலந்துரையாடல் அக்டோபர் 28ம் திகதி காலை இடம் பெற்றது. பெங்களூரைச் சேர்ந்த டாக்டர் எஸ். ஸ்ரீதர், மடம் ரஸ்ற் (Maddam Trust) நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் பொன்னா விக்னராஜா மற்றும் யோகக்கலை விற்பன்னர்கள், பயிற்சியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### வெலிக்கடையில் தீபாவளி வழிபாடு

நவம்பர் மாதம் 2ம் திகதி தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் அமைந்துள்ள இந்துப் பூஜை அறையில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்துக் கைதிகளுக்கான விசேட பூஜைவழிபாடு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

### இந்துசமயப் போட்டிகள்–1994

அறநெறிப்பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் மத்தியில் பேச்சு, கட்டுரை, பண்ணிசை, திருக்குறள் மனனம், ஓவியம், ஆன்மீக உடைப் போட்டி ஆகிய துறைகளில் போட்டிகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அகில இலங்கை ரீதியாக மாவட்ட மட்டத்தில் 17மாவட்டங்களில் கடந்த அக்டோபர் 23ம் திகதி நடத்தியது.

மாணவர்கள் மத்தியில் இந்துசமய, அறிவை வளர்ப்பதும், சமய உணர்வை ஏற்படுத்தலும். மாணவர்களின் எழுத்துத் திறன், பாடும் திறன், பேச்சுத் திறன், மனனம் செய்யும் திறன் ஆகிவற்றை வளர்த்தலும், இந்து சமய மரபுகளை பழக்கங்களைப் பேணுதலும் இப்போட்டிகளின் நோக்கங்களாகும். 1994 ஆம் ஆண்டுப் போட்டிகளுக்கு அகில இலங்கை ரீதியாக 8000க்கு மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பங்களை அனுப்பி இருந்தனர். மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப்பிரிவு, பாலர் பிரிவு மாணவர்கள் இப்போட்டிகளில் பங்கு கொண்டனர். அவ்வவ் மாவட்டக் கல்வித் திணைக்களத்தின் அநுசரணை பெறப்பட்டு கல்வித்திணைக்கள உதவிப்பணிப்பாளர்கள், அதிபர்கள் நியமிக்கப்பட்டு இப் போட்டிகள் நடாத்தப்பட்டன.

மாவட்ட மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களுள் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெறும் மாணவர்கள் கொழும்பில் தேசிய ரீதியில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ள அழைக்கப்படவுள்ளனர். தேசிய ரீதியிலான போட்டிகள் டிசம்பர் மாதமளவில் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'இலங்கையின் இந்துக் கோயில்கள்' நூல் வெளியீடு

திணைக்கள வெளியீடான "இலங்கையின் இந்துக் கோயில்கள்" என்ற நூலின் வெளியீடு செப்டெம்பர் 3ம்திகதி மட்டக்களப்பு நாவற்குடா இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவானாந்தா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். தெய்வநாயகம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்களின் அறிமுக உரையைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. யோகராசா, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் திரு. சி. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

கிழக்குப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி கலாநிதி சி. மௌனகுரு அவர்களின் ஆய்வுரையைத் தொடர்ந்து நூற் பதிப்பாசிரியரான பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களின் உரை இடம் பெற்றது. நிறைவில், திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

## 'இந்துக் கலைக் களஞ்சியம்' பாகம்-3

இந்துக் கலைக் களஞ்சியம் தொகுதிகள் இரண்டு இதுவரை திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன. மூன்றாவது தொகுதி அச்சுக்குக் கொடுக்கப்படவுள்ளது. இத் தொகுதியில் 'க' தொடக்கம் 'கௌ' வரையிலான எழுத்துக்களுக்குரிய 510 சொற்கள் இடம் பெறுகின்றன.

## திருக்கார்த்திகை சிறப்பு நிகழ்ச்சி

திருக்கார்த்திகை உற்சவத்தை முன்னிட்டு நவம்பர் மாதம் 18ம் திகதி திணைக்களத்தின் அநுசரணையோடு கொழும்பு, கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் சொக்கப்பனைத் திருவிழாவும் சிறப்பு திருமுறை இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றன.

தமிழ்நாடு திருமதி சுப்புலட்சுமி மோகன் அவர்கள் இன்னிசைக் கச்சேரி நிகழ்த்தினார்.

ஆலய தர்மகர்த்தாச் சபைச் செயலாளர் திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு திணைக்களப்பணிப்பாளர் திரு.க.சண்முகலிங்கம், உதவிப் பணிப்பாளர் திரு.குமார் வடிவேல் ஆகியோர் கலந்துசிறப்பித்தனர்.

## கருத்தரங்கும் பரிசளிப்பு வைபவமும்

கடந்த ஜூலை மாதம் 9ம்திகதி மட்டக்களப்பு நாவற்குடா இந்து கலாசார மண்டபத்தில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கும், 1993ம் ஆண்டு இந்து சமயப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் நடைபெற்றது.

மட்டக்களப்பு முன்னாள் அரச அதிபர் திரு. இ. மோனகுருசாமி அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா, மட்டக்களப்பு மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவானந்தா ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. குமார்வடிவேல் அவர்களின் அறிமுக உரையைத் தொடர்ந்து சி. கிருஷ்ணபிள்ளை, என். வினாசித்தம்பி, செல்வி ரஜனி நடராஜா, திருமதி இ. தட்சணாமூர்த்தி ஆகியோரின் சிறப்புரைகள் இடம் பெற்றன.

திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். தெய்வநாயகம் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வுக் கட்டுரைத் தொடர்

இலங்கையின் சமய பண்பாட்டு வரலாறு தொடர்பான ஆய்வுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் திணைக்களம் ஆய்வுக் கட்டுரைத் தொடர் ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது.

இத்தொடரின் முதலாவது கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. ''மட்டக்களப்பில் வீரசைவக் குருமார் குடியேற்றமும், பரம்பலும்'' என்ற தலைப்பிலான இக்கட்டுரையை திரு. சிவசம்பு தட்சணாமூர்த்தி அவர்கள் எழுதியுள்ளார்.

திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்களின் அறிமுகத்துடன் ரோணியோ வடிவில் வெளியிடப்பட்டுள்ள இக் கட்டுரை இத்துறையில் ஆர்வமுள்ளோருக்கு விநியோகிக்கப்படுகின்றது.

## இந்துப் பேருரை

செப்டெம்பர் 19ம் திகதி மாலை திணைக்களக் கேட்போர் கூடத்தில் லக்னோ இராமகிருஷ்ண மிஷன் நிலையச் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி ஸ்ரீதரானந்தா அவர்களின் ''தற்காலத்திற்கு இராமகிருஷ்ண, விவேகானந்தரின் போதனைகள்'' எனும் தலைப்பிலான சொற்பொழிவு இடம் பெற்றது.

கலாசார சமய விவகார அமைச்சின், மேலதிகச் செயலாளர் திரு.கா. தயாபரன் அவர்கள் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்

## அகோரமூர்த்தி

அகோரமூர்த்தி என்பது அச்சத்தினை விளைவிக்கும் சிவபெருமானது திருவுருவங்களுள் ஒன்றாகும். அகோரமூர்த்தியின் திருவுருவக் குறிப்புகள் காரணாகமம், சிவதத்வரத்னாகரம் போன்ற நூல்களில் காணப்படுகின்றன. இத்திருவுருவம் எட்டு, பத்து, முப்பத்திரண்டு கைகளுடையதாக அமைக்கப்படுவதுண்டு. எட்டுக் கைகளுடைய திருவுருவத்தில் சூலம், உடுக்கை, பாசம், கபாலம், தண்டம், வில், அம்பு, குறுவாள் ஆகியவை இடம் பெறும். கறுத்த நிறம் உடைய இவரது உடல் ஆடையின்றியோ யானை, சிங்கம் ஆகியவற்றின் தோல்களிலான ஆடையணிந்தோ காணப்படும். உடலில் பாம்புகள், தேள்கள் ஆகியவை அணிகலன்களாகத் திகழும். மிகுந்த அச்சத்தினையூட்டும் முகத்தோற்றமும், வாயின் இருபுறமும் வளைந்த கோரைப் பற்களும் பாம்பினால் கட்டப்பட்ட தலை முடியும் கழுத்தில் மட்டும் நீல நிறமும் இத் திருவுருவத்தின் சிறப்புகளாம்.

மற்றொரு திருவுருவ அமைப்பில் எட்டுக் கைகளும், மூன்று கண்களும் அச்சம் தரும் முகத் தோற்றமும், கறுத்த நிறமும், வளைந்த கோரைப்பற்களும் காணப்படும். இவரது கழுத்தில் தலைமாலையும், குறுவாள் மாலையும், தேள்களாலான மாலையும் இடம் பெறுவதுண்டு. தலைமுடி தீச்சுடர் போலிருக்கும். செந்நிற ஆடையும் சிவந்த மலர் மாலையும் இவருக்கு அணிவது வழக்கம். இவர் கைகள் வேதாளம், குறுவாள், உடுக்கை, கபாலம், மணி முதலியவைகளைக் கொண்டும் மற்றிரு கைகள் சூலத்தை மார்புக்கு எதிராகச் சற்று மேல் நோக்கிப் பிடித்தவாறும் காணப்படும்.

பத்துக் கைகளையுடைய அகோரமூர்த்தி ''தசபுய'' அகோரமூர்த்தி எனச் சொல்லப் பெறுவார். இவர் எட்டுக் கைகளில் பரசு, உடுக்கை, குறுவாள், கேடயம், அம்பு, வில், சூலம், கபாலம் ஆகியவை கொண்டிருப்பார். எஞ்சிய இரண்டு கைகள் அபயம், வரதம் ஆகிய முத்திரைகளைக் கொண்டு விளங்கும். முப்பத்திரண்டு கைகளையுடைய அகோரமூர்த்தி அச்சத்தின் வடிவாய்த் தலையில் சடாமகுடம், பிறைச் சந்திரன் ஆகியவற்றையும் முக்கண்களையும் கொண்டவராகக் காட்சியளிப்பார்.

ஆதாரம் – வாழ்வியற்களஞ்சியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்

## தென்னாபிரிக்காவில் சிவநந்திஅடிகளார் சொற்பொழிவுகள்

லண்டன் மெய்கண்டார் ஆதீன முதல்வரும், உலக சைவப் பேரவையின் தலைவருமான தவத்திரு சிவநந்தி அடிகளார் இவ்வருடம் செப்டெம்பர் மாதம் மூன்று வார கால விஜயமொன்றை மேற்கொண்டு தென்னாபிரிக்கா சென்றிருந்தார்.

சுவாமிகள் செப்டெம்பர் 17ம் திகதியிலிருந்து அக்டோபர் 5ம் திகதி வரை தென்னாபிரிக்காவின் பல ஆலயங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் சைவ சித்தாந்தப் பேருரைகளை நிகழ்த்தினார்.

சுவாமிகளின் சொற்பொழிவுகள் தென்னாபிரிக்கா வாழ் இந்து மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன. அங்கு வாழும் இந்து மக்கள் தமது சமய பாரம்பரியங்களையும் தமிழ்க் கலாசாரத்தையும் அறிந்து கொள்வதிலும் பேணுவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டினர்.

அடிகளாரின் விஜயத்தின் விளைவாக உலக சைவப் பேரவையின் அநுசரணையோடு தென்னாபிரிக்கா டர்பன் நகரில் 1996ம் ஆண்டு உலக சைவத்தமிழ் மாநாடு நடைபெற வேண்டுமென முடிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தவத்திரு சிவநந்தி அடிகளார் இலங்கை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். விஞ்ஞானத்தில் எம்.எஸ்.சி. பட்டம் பெற்ற இவர் சிறந்த தமிழறிஞருமாவர். லண்டனில் முதலாவது சைவ ஆதீனம் அமைத்த பெருமை அடிகளாருக்கு உண்டு.

சைவ சித்தாந்தம், தமிழ்ப் பண்பாடு தொடர்பாக தமிழிலும் ஆங்கிலத்திலும் பல நூல்களை எழுதியுள்ளார். அடிகளார் தலைமையில் இயங்கும் உலக சைவ பேரவை உலகெங்கும் வாழும் சைவ மக்களை ஒருங்கிணைக்கும் ஒரு அமைப்பாகும்.

அடிகளாரின் புலமை கருதி தமிழ்நாடு பாரதிதாசன் பல்கலைக் கழகம், தமிழ், சைவசித்தாந்தம் ஆகியதுறைகளில் டாக்டர் பட்ட ஆய்வு மேற்கொள்வோருக்கு வெளி நிலைப் பரீட்சகராக இவரை நியமித்துள்ளது.

### அடிகளாரின் சொற்பொழிவு இடம் பெற்ற இடங்கள்

| | | |
|---|---|---|
| செப்டெம்பர்; | 17 | மெரிபேங் |
| ,, | 18 | ஷாட்ஸ்வேர்த் |
| ,, | 18 | உம்ஷின்டோ |
| ,, | 19 | நட்டால் பல்கலைக் கழகம் |
| ,, | 20 | சைவ சித்தாந்த சங்கம், வெஸ்ட் கிளிவ் |
| ,, | 21 | சைவ சித்தாந்த சங்கம், பீனிக்ஸ் |
| ,, | 23 | மெரிபேங் மார்க்குயி |
| ,, | 24 | |
| ,, | 25 | |
| ,, | 26 | ஷாட்ஸ் வேர்த் |
| ,, | 27 | |
| ,, | 28 | டொங்காட்-வெருலம் |
| ,, | 29 | டர்பன் பல்கலைக் கழகம் |
| ,, | 29 | நியூலட்ன்ஸ் |
| அக்டோபர்; | 1 | கிரே டவுன் |
| ,, | 1 | பீட்டர் மாரிட்ஸ் பேர்க் |
| ,, | 3 | ட்ரான்ஸ்வால் |
| ,, | 3 | சிவன் ஆலயம் அக்டோன்விலா |
| ,, | 4 | சிவன் கோவில் லெனேசியா |
| ,, | 5 | சிவன் கோவில் லெனேசியா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் உலக சைவத்தமிழ் மாநாடு

உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை நான்காவது உலக சைவத் தமிழ் மாநாட்டை 1995ம் ஆண்டு செம்டெம்பர் மாதத்தில் கொழும்பில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இம் மாநாடு உலக சைவப் பேரவையின் ஆதரவுடன் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு சைவ முன்னேற்றச்சங்கம் என்பனவற்றின் அநுசரணையுடன் நடைபெறுவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**''இன்றைய சர்வ தேசச்சூழலில் சைவத்தின் மறுமலர்ச்சிக்கான செயற்திட்டங்கள்''** என்பதே மாநாட்டின் தொனிப்பொருளாகும். தமிழகத்திலிருந்தும் ஏனைய பல நாடுகளிலிருந்தும் சைவத் தமிழறிஞர்கள் மாநாட்டிற் கலந்து கொண்டு ஆய்வுரைகள் நிகழ்த்தவுள்ளனர்.

அண்மையில் பாரீஸில் நடைபெற்ற மூன்றாவது உலகத் சைவத்தமிழ் மாநாட்




கடந்த ஜூன் மாதம் பாரீஸில் நடைபெற்ற உலக சைவத் தமிழ் மாநாட்டில் சிறப்புப் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்ட லண்டன் சைவ முன்னேற்றச் சங்கச் செயலாளர் எஸ். இராமநாதன், இலங்கைக் கிளைத் தலைவர் திரு. கா. தயாபரன், உபதலைவர் திரு. க. சண்முக லிங்கம், திருமதி லீலாவதி சண்முகதாஸ், தமிழகப் பேராசிரியர் க.ப. அறவாணன், சிங்கப்பூர் பிரதிநிதி திரு. எஸ். சீ.கிருஷ்ணன் ஆகியோர் தவத்திரு சிவநந்தி அடிகளாருடன் இருப்பதைப் படத்திற் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டின் இலங்கைப் பிரதிநிதிகளாக இலங்கைக் கிளையின் தலைவர் திரு. கா. தயாபரன், உபதலைவர்கள்: திரு. க. சண்முகலிங்கம், திரு.ப.ச.சர்மா ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக் கிளையின் செயலாளராக ''இந்து கலாசாரம்'' இதழின் ஆசிரியர் திரு. ஏ. எம். துரைசாமி பணியாற்றுகின்றார்.

## சைவ உலகம் காலாண்டு செய்திமலர்

லண்டன் மெய்கண்டார் ஆதீன வெளியீடாக உலக சைவப்பேரவையின் 'செய்தி மலர்' செப்டெம்பர் 94 இதழ் வெளிவந்துள்ளது. இவ்விதழில் தவத்திரு சிவநந்தி அடிகளார், டாக்டர் கே. லோகநாதன், டாக்டர் எஸ். கங்காதரன் (மதுரை காமராஜர் பல்கலைக் கழகம்), சரவணன் முனியாண்டி (மலேஷியா பல்கலைக் கழகம்), பேராசிரியர் வி. குமாரசுவாமி(ரியூனியன்), ஆகியோரின் ஆங்கிலக் கட்டுரைகளும் கி. அஞ்சலை தேவி (மலேஷியா), க. சண்முகலிங்கம் (இலங்கை), மு. விவேகாநந்தன் (தமிழ்நாடு), கி. லோகநாதன் (மலேஷியப் பல்கலைக் கழகம்), டாக்டர் கி கருணாகரன் (மலேசியப் பல்கலைக் கழகம்) ஆகியோரின் தமிழ்க் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

இத்துடன் உலக சைவப் பேரவைச் செய்திகள், மூன்றாவது உலக சைவத் தமிழ்மாநாடு பற்றிய படங்கள், செய்திகள் என்பனவும் இடம் பெற்றுள்ளன.

சைவசித்தாந்த, தமிழ்த் துறைக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவரும் இருமொழி இதழான சைவ உலகத்தின் ஆசிரியராக மலேஷியப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் கி. லோகநாதன் அவர்கள் பணிபுரிகிறார்.

## சுவாமி விவேகானந்தர் சிக்காகோ சொற்பொழிவு விழா

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ பேருரையின் நிறைவு விழா நிகழ்ச்சிகள் இராமகிருஷ்ண மிஷன் தலைமை நிலையமான கல்கத்தா பேலூர் மடத்தில் கடந்த நவம்பர் மாதம் 14, 15, 16ம் திகதிகளில் மிக விமர்சையாக நடைபெற்றன.

இலங்கையிலிருந்து வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா, மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த ஸ்ரீமத் சுவாமி அஜிராத்மானந்தா ஆகியோர் தலைமையில் 40 பிரதிநிதிகள் கொண்ட குழுவொன்று விழாவில் கலந்து கொண்டது.

உலகின் பல பாகங்களையுஞ் சேர்ந்த அறிஞர்களும் பிரதிநிதிகளும் நிறைவு விழாவில் கலந்து கொண்டனர்.

## குருஜி ஹரிதாஸ் கிரி சமாதி

'குருஜி' என பக்தர்களால் அன்போடு அழைக்கப்பட்ட ஹரிதாஸ்கிரி சுவாமிகள் செப்டெம்பர் 4ம்திகதி வட இந்தியாவில் உள்ள பத்ரிநாத் கோடி லிங்க ஸ்தலத்தில் கங்கா ஸ்நானம் செய்யும்போது ஜலசமாதி அடைந்தார்.

விமான ஓட்டியாக இருந்து துறவற வாழ்வை மேற்கொண்ட சுவாமிகள் சத்குரு ஞானானந்த கிரி சுவாமிகளின் பிரதம சீடராவார். தமது குருவின் ஞானோபதேசங்களைப் பின்பற்றி நாமசங்கீர்த்தனம், அன்னதானம் என்பனவற்றை முறையாக நடத்தி வந்த குருஜி அவர்கள் தமிழகம் காஞ்சிபுரம் தென்னாங்கூர் என்ற கிராமத்தில் தமதுகுருநாதரின்பெயரால் மாபெரும் ஆலயம் ஒன்றையும் அத்துடன் பஜனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபம், நூல் நிலையம், வேதப் பாடசாலை, யாத்திரிகர் விடுதி என்பவற்றையும் அமைத்து அரிய பணிகளை ஆற்றி வந்தார்.

சங்கீதத்தில் முறையான தேர்ச்சி இல்லாத குருஜி அவர்கள் நாம சங்கீர்த்தனத்தை மனமுருகப்பாடிப் பாடியே கேட்போரை நெகிழ வத்தார். சுவாமியின் பஜனைச் சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கங்கள் என்பன சிங்கப்பூர், மலேஷியா, இலங்கை, லண்டன், அமெரிக்கா, தென்னாபிரிக்கா போன்றபலநாடுகளிலும் நடைபெற்றுள்ளன. 'கணீர்' என்ற குரல் வளத்தால் ஆயிரக்கணக்கானோரை பக்தி மார்க்கத்திற்கு ஈர்த்தவர் குருஜி அவர்கள்.

இவ்வருடம் ஜனவரி மாதம் இலங்கை வந்து பல கதாகாலேட்ஷேப நிகழ்ச்சிகளை நடத்திய சுவாமிகள் ஜனவரி 23ம் திகதி கண்டியில் நடைபெற்ற இந்து அறநெறிக் கல்வி மாநாட்டிலும் கலந்துகொண்டு மிகச் சிறப்பாக சங்கீத உபந்நியாசம் செய்தருளினார்.

## திருப்பதி ஆலயத்திற்கு புதிய சித்திரத் தங்கரதம்

திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமிக்கு இரண்டரைக் கோடி ரூபா செலவில் புதிய தங்க ரதம் ஒன்று நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

தமிழக அரசின் கைவினைத் தொழில் நிறுவனமான ''பூம்புகார்'' இரண்டு ஆண்டுகளில் இத்தேரை நிர்மாணித்துக் கொடுத்துள்ளது. 22 அடி உயரமான இத்தேர் இரண்டு குதிரைகள் ஓட்டிச்செல்வது போன்ற அழகிய அமைப்பில் உருவாக்கப் பட்டுள்ளது.

தேக்கு மரத்தில் செய்யப்பட்டுள்ள இத்தேருக்கு 28கிலோ தங்கமும் 780கிலோ செப்புத் தகடுகளும் கலந்த கலவை பயன்படுத்தப்பட்டுள்ளது.

## சுவிஸ் நகரில் ஆத்மஜோதி முத்தையா

இலங்கையின் ஆன்மீக அறிஞரான ஆத்மஜோதி முத்தையா அவர்கள் அண்மையில் சுவிற்சர்லாந்துக்கு விஜயம் செய்து அங்கு வாழும் இந்துத் தமிழ் மக்களிடையே ஆன்மீகச் சொற்பொழிவுகளை நடத்தி வருகின்றார்.

சுவிற்சர்லாந்தில் பேர்ண், சூரிச், பாசல், ஓல்டன், லூர்ற்சேன் ஆகிய மாநகரங்களில் இடம் பெற்ற நவராத்திரி விழாக்களில் திரு. முத்தையா அவர்களின் சொற்பொழிவுகள் இடம்பெற்றன.

டிசம்பர் மாதம் 16ம்திகதி வரை அவர் சுவிற்சர்லாந்தில் தங்கியிருந்து அருளுரைகள் நிகழ்த்தவுள்ளார்.

## அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றக் கிளை

அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையை மீண்டும் இயங்கச்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுதொடர்பான கூட்டமொன்று நவம்பர் மாதம் 26ம்திகதி பம்பலப்பிட்டி சரஸ்தி மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கட்டத்தின் போது கிளையின் தலைவராக பேராசிரியர் எஸ். பத்மநாதன் அவர்களும் செயலாளராக கட்டிடக் கலைஞர் வி. எஸ். துரைராஜா அவர்களும் நியமிக்கப்பட்டனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும்

## மரச்சிற்பக் கலைஞர் கார்த்திகேசு சிவசுப்பிரமணியம்

இங்கு காணப்படும் படத்தில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரின் அழகிய வடிவம் மரச்சிற்பமாகக் காட்சியளிக்கின்றது. இது போன்ற மரச்சிற்பங்களைச் செதுக்கும் கைவினைக் கலைஞராக திரு. கா. சிவசுப்பிரமணியம் விளங்குகிறார்.


தற்போது மட்டக்களப்பில் வாழும் இவர் ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் சித்திர, இசை ஆசிரியராகக் கடமை புரிந்தவர்.



1960ம் ஆண்டு தொடக்கம் நாட்டின் பல பாகங்களிலும் பிரபல ஆலயங்களில் உருவான தேர்களுக்கு அழகிய சிற்ப வடிவங்களை இக்கலைஞர் செதுக்கித்தந்துள்ளார்.

திருகோணமலை காளி கோவிலில் அமைந்துள்ள காளி பாலகனைக் கிழிக்கும் காட்சி, அராலி முருகன் ஆலயத் தேரில் உள்ள கந்தபுராண வரலாற்றுச்சிற்பங்கள், நல்லூர் கம்பன் கோட்ட நுழைவாயிலில் உள்ள கம்பராமாயணக் காட்சிகள், கோப்பாய் கண்ணகி அம்மன் கோயில் தேர்க் காட்சிகள் என்பன இவரது வடிவமைப்பில் உருவானவை.

சிற்பக் கலையைப் போலவே சங்கீதத் துறையிலும் சிறந்த பயிற்சி பெற்றுள்ள இவர் சங்கீத வித்துவான்களான மகாராஜபுரம் சந்தானம், இராமநாதபுரம் லட்சுமி



நாராயண ஐயர், கொக்குவில் இராசையா ஆகியோரிடம் முறையாக இசைப் பயிற்சி பெற்றவர். இலங்கை வானொலியில் பல வருடங்களாக இவரது இசைக் கச்சேரிகள் நடைபெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சிவசுப்பிரமணியம் செதுக்கிய ஸ்ரீ இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஸ்ரீ சாரதாதேவி அம்மையார் ஆகியோரின் சிற்பத் திருவுருவங்கள் அமெரிக்காவிலுள்ள பொஸ்டன் இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நூல் வெளியீடு

திருமறைக் கலா மன்றத்தினரின் (A Catholic - Hindu Encounter) என்ற ஆங்கில நூலின் வெளியீடு செப்டெம்பர் 24ம்திகதி மாலை கொள்ளுப்பிட்டி சசகாவ மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நூல் திருமறைக் கலா மன்றத்தின் இயக்குநரான பேராசிரியர் வண.என்.எம். சவரி அடிகளாரின் கலாநிதி பட்ட ஆய்வாகும்.

கண்டி மாவட்டப் பேராயர் அதி. வண. பிதா டாக்டர் வியன்னி பெர்ணான்டோ, ஜேர்மன் சமஷ்டி குடியரசின் இலங்கைத் தூதுவர் மேன்மை தங்கிய கலாநிதி மைக்கல் சிமித் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தனர்.

பேராசிரியர் பேட்ரம் பஸ்தியாம்பிள்ளை, பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் அடிகளாரின் பணிகளை வாழ்த்திப் பேசினர்.

## கிரேஷியன் நிதியம் நூற்பரிசுகள்

1994ம் ஆண்டு காலப்பகுதிக்குள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு வெளியான சிறந்த இலங்கை ஆக்கங்களுக்கான கிரேஷியன் நிதியத்தின் மைக்கல் ஒன்டாட்சே விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நாவல், நாடகம், கவிதை, இலக்கிய ஆய்வுகள் போன்ற துறைகளில் எழுதப்பட்ட ஆங்கிலப்படைப்புக்களும், தமிழ்,சிங்கள மொழிகளிலிருந்து மொழிபெயர்ப்பு செய்யப்பட்டவைகளும் விண்ணப்பத்திற்கு தகுதியானவையாகும்.

இவ் விண்ணப்பத்திற்கான இறுதித் திகதி 1994 டிசம்பர் 31 ஆகும். மேலதிக விபரங்களை:

The Michael Ondaatje Trust,
No. 8 Alfred House Garden Rd,
Colombo - 3.

என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

## தமிழ் விழா

திருமறைக் கலாமன்றத்தினரின் தமிழ் விழா, கருத்தரங்கு என்பன செப்டெம்பர் 16,17. 18ம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்றன. இலக்கியக் கருத்தரங்கிற்கு சிறப்பாளராக தமிழகப் பேராசிரியர் எம். ஆர் அடைக்கலசாமி அவர்கள் கலந்து கொண்டார்.

16ம் திகதி பம்பலப்பிட்டி மிலாகிரிய ஆலய மண்டபத்தில் இலக்கியக் கருத்தரங்கு நடைபெற்றது. மாலை மருதானை டவர் மண்டபத்தில் ''தரிசனம்'' எனும் மௌன நாடகம் இடம் பெற்றது.

17ம் திகதி முழுநாள் இலக்கிய கருத்தரங்கு, பம்பலப்பிட்டி மிலாகிரிய ஆலய மண்டபத்திலும் மாலை மருதானை டவர் மண்டபத்தில் 'ஞான சவுந்தரி' இசை நாடகமும் நடைபெற்றன

18ம் திகதி காலை மருதானை சமூக சமய நடுநிலையத்தில் இலக்கியக் கருத்தரங்கும் மாலை 'அனைத்தும் அவரே' என்ற நாட்டுக் கூத்தும் இடம் பெற்றன.

திருமறைக் கலா மன்றத்தின் கொழும்புக்கிளை தமிழ் விழாவுக்கான சிறப்பான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

## சுவாமி விபுலாநந்தர் நினைவு விழா

சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 101வது நினைவு தினவிழாவும், வித்துவான் க. செபரெத்தினம் அவர்கள் எழுதிய 'விபுலாநந்த அடிகளாரின் வாழ்வும் வளமும்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நூல் வெளியீடும் செப்டெம்பர் 31ம் திகதி கொழும்பு-2 சைவ முன்னேற்றச்சங்க நால்வர் மணிமண்டபத்தில் நடைபெற்றன.

நிகழ்ச்சிக்கு சங்கத் துணைத் தலைவர் வைத்திய கலாநிதி சிவஞானம் தலைமை வகித்தார். மொரிஷியஸ் நாட்டின் இலங்கைத் தூதுவர் திரு. தெ. ஈஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்துசமய திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், பொது நிர்வாக அமைச்சின் ஆலோசகர் திரு. ஆர். வேதநாயகம், இந்துத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

விபுலாநந்தர் நினைவு தினத்தையொட்டி சங்கம் நடத்திய நாவன்மைப் போட்டிகளிற் பரிசு பெற்ற அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பும் அன்று இடம் பெற்றது.

## இலங்கையில் காஞ்சிப் பெரியவர்

காஞ்சி காமகோடி சங்கர மடத்தின் பீடாதிபதி ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் அகிலஇலங்கை இந்து மாமன்றக் கட்டிடத்தைத் திறந்து வைக்க வருகை தர உள்ளதாக மன்றச்செயலாளர் திரு. க. நீலகண்டன் அறிவித்துள்ளார்.

கொழும்பு சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையில் நிறுவப்பட்டு வரும் இந்து மாமன்றக் கட்டிடம் ஆறு மாடிகளைக் கொண்டது. ஆறாவது மாடியில் வழிபாட்டுக் கூடம், மண்டபம் என்பன அமைக்கப்படுகின்றன. எதிர்வரும் தைப்பூசத் திருநாளன்று இத்திறப்பு விழா நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஐராவதம் மகாதேவன் இலங்கை விஜயம்

இந்திய வரலாற்று ஆராய்ச்சி சபையின் ஆய்வாளரும், பிரபல கல்வெட்டியலாளரும், பத்திரிகையாளருமான அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் செப்டெம்பர் முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

செப்டெம்பர் 2ம் திகதி கொழும்பில் மறைத்திரு தனிநாயகம் அடிகளார் நினைவுப் பேருரை நிகழ்த்திய திரு. மகாதேவன் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் அநுசரணையோடு மிகிந்தலை, அநுராதபுரம் ஆகிய புராதன இடங்களிலுள்ள பிராமிக் கல்வெட்டுகளையும் பார்வையிட்டார். பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் அவரது சொற்பொழிவுகள் இடம் பெற்றன. செப்டெம்பர் 8ம் திகதி கொழும்பில் நடைபெற்ற நாணயவியல் மாநாட்டிலும் கலந்து கொண்டார்.

## 'தரிசனம்'- மௌன நாடகம்

திருமறைக் கலா மன்றத்தின் கொழும்புக்கிளை, பேராசிரியர் ஈ. சரத் சந்திர, மிரண்டா ஹேமலதா ஆகியோரின் நாடகக் குழுவினருடன் இணைந்து 'தர்ஷண' என்ற 'மௌன நாடகம்' ஒன்றினை செப்டெம்பர் 16ம் திகதி மருதானை டவர் மண்டபத்தில் நடத்தியது.

இன ஐக்கியம் இந் நாடகத்தின் முக்கிய கருப்பொருளாகும்.

துட்டகைமுனு, எல்லாளன் ஆகிய அரசர்களின் காலப் பின்னணியினை வைத்து நிகழ்வுகள் பின்னப்பட்டிருந்தன. மௌன அசைவுகள் மூலம் நாடகம் நிகழ்த்தப்பட்டது.

தமிழ், சிங்களக் கலைஞர்கள் இணைந்து வழங்கிய இந் நாடகத்தை பேராசிரியர் வண. என். எம். சவரி அடிகளார் தயாரித்து நெறிப்படுத்தி இருந்தார். நோராட் நிறுவனத்தின் அநுசரணையோடு இந்நாடகம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண சமூகம் ஒரு பன்முக ஆய்வு

விபவி கலாசார மையத்தின் ஏற்பாட்டில் ''யாழ்ப்பாண சமூகம் - ஒரு பன்முக ஆய்வு'' என்ற தலைப்பிலான கருத்தரங்கொன்று செப்டெம்பர் 19ம் திகதி கொழும்பு-3ல் அமைந்துள்ள 'குருகெதர' மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாண சமூகத்தின் சமூக வரலாறு, சனயேற்றமும் சூழலின் பாதிப்பும், பொருளாதார கட்டமைவு, அரசியல் தலைமைத்துவம், சமூகப் பொருளாதார பின்னணி, பெண்களின் நிலை, இளைஞர்களிடையே காணப்பெறும் சமூக உளவியற் போக்குகள், கருத்து நிலையும், இலக்கியமும் ஆகிய பல்வேறு தலைப்புக்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, திரு. அ. விஜயகிருஷ்ணன், திரு. க. சண்முகலிங்கம், கலாநிதி அம்பலவாணர் சிவராசா, கலாநிதி செல்வி திருச்சந்திரன், கொ.றோ. கொன்ஸ்ரன்ரைன், சித்திரலேகா மௌனகுரு ஆகியோர் கலந்து கொண்டு ஆய்வுரைகளைச் சமர்ப்பித்தனர்.

## இலங்கைத் தமிழ்ச் சினிமாவின் கதை

எழுத்தாளரும், ஒலிபரப்பாளருமான தம்பிஜயா தேவதாஸ் எழுதிய ''இலங்கைத்தமிழ் சினிமாவின் கதை'' எனும் ஆய்வு நூலின் வெளியீட்டு விழா நவம்பர் மாதம் 17ம் திகதி மாலை கொள்ளுப்பிட்டி சசகாவா மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கைத் தமிழ் சினிமாத்துறை சார்ந்த கலைஞர்கள், இயக்குநர்கள், கலையுலகப் பிரமுகர்கள் பலரும் விழாவிற் கலந்து சிறப்பித்தனர்.

## அந்தாளிக் குறிஞ்சி

அந்தாளிக் குறிஞ்சி தேவாரப் பண்களுள் ஒன்று. இசைத் தமிழ்ப் பதிகங்களாகிய தேவாரத்தைத் திருமுறைகளாகப் பகுத்துத் தொகுத்தபோது, திருவருள் துணை கொண்டு திருநீலகண்டயாழ்ப்பாணர் மரபில் வந்த ஒரு பாடினியாரால் அப்பதிகங்களுக்கு இசை அமைக்கப்பட்டது. திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பதிகங்கள் முதன் மூன்று திருமுறைகளாய்ச் செவ்வழி முதலிய 22 பண்களில் அடங்கின. தமிழ் மக்கள் பண்டைக் காலத்தில் நூற்று மூன்று பண்களை வகுத்துக் காட்டியுள்ளனர். அவற்றுள் 38ஆவது பண் அந்தாளிக் குறிஞ்சி என்பதாகும். இது குறிஞ்சிப் பெரும்பண்ணின் நைவளம் என்னும் திறத்தின் புறநிலையாய் அமையும். ஞானசம்பந்தரின் மூன்றாவது திருமுறையின் இறுதியிலமைந்துள்ள 124,125 ஆகிய இரு பதிகங்கள் மட்டுமே, தேவாரத்தில் அந்தாளிக் குறிஞ்சியில் அமைந்துள்ளன. அவர் திருநல்லூர்ப் பெருமணத்தில் தம் திருமணம் காண வந்தவர் அனைவரையும் உட்கொண்டு, அவ்வூர்த் திருக்கோயிலில் தோன்றிய சோதியில் புக்கபோது பாடிய திருப்பதிகம், 'கல்லூர்ப் பெருமணம்' என்னும் இறுதிப் பதிகமாகும். அதனால் ஞானசம்பந்தர் இறுதியாகப் பாடிய பண் அந்தாளிக் குறிஞ்சியாகும். திருமுறை கண்ட புராணம் 'அந்தாளிக்கு ஒன்றாக்கி' என்பதனால் ஞானசம்பந்தரின் இரு அந்தாளிக் குறிஞ்சிப்பண்களும் ஒரே கட்டளையமைப்புடையனவாயின என்பது புலனாகிறது. 124- ஆம் பதிகமாகிய திருக்கருகாவூர் வெள்ளடைப் பதிகம், தானனா தானன தானா தானனா - ''சுண்ணவெண்ணீறணி மார்பிற்றோல்புனைந்து'' என்னும் அமைப்புடையது.

- ஆதாரம் : வாழ்வியற்களஞ்சியம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றோரத்தில் அழகுடன் திகழும் முருகாமலை ஆலயம்

கண்டியிலிருந்து முப்பது கிலோ மீற்றர் தொலைவில் கண்டி – மெதமஹ நுவர பிரதான வீதியில் அமைந்துள்ளது ஸ்ரீ கதிரேசப்பெருமான் ஆலயம். மாவலி ஆற்றோரத்தில் அழகுடன் திகழும் இவ் வாலயம் நூற்றாண்டுக்காலப் பழமை மிக்கது.

நீண்டகாலமாக இப்பகுதியில் வாழ்ந்த சைவத் தமிழ் மக்கள் 1934ம் ஆண்டு ஆவணி மூல நட்சத்திரத்தில் ஓலையிலான சிறு குடிலை அமைத்து தமது வழிபாடுகளை மேற்கொண்டனர். காலக்கிரமத்தில் உன்னஸ்கிரிய, தெல்தெனிய, உடிஸ்பத்துவ, றங்கல ஆகிய பிரதேச மக்கள் இன, மத, பேதமின்றி வழிபடத்தக்கவொரு ஆலயமாக இது வளர்ச்சி பெற்றது. பிரதேச மக்களின் பேராதரவுடன் 1956ம் ஆண்டு கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. அதன் பின் வருடந்தோறும் மக்கள் ஆயிரக்கணக்கில் கூடி தேர்த் திருவிழாக் கண்டனர்.



கும்பாபிஷேக வைபவத்திற் கலந்துகொண்ட திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா அவர்கள் உரை நிகழ்த்துவதைப் படத்திற் காணலாம்.

அருட் சிறப்புடன் திகழ்ந்த இவ்வாலயம் 1981—82ம் ஆண்டுகளில் இப்பிரதேசங்களில் நிகழ்ந்த கலவரங்களின் போது கைவிடப்பட்டது. பிரதேச இந்து மக்களில் பெரும்பாலானோர் வெவ்வேறிடங்களுக்குக் குடிபெயர்ந்தமையினால் கவனிப்பாரற்று பன்னிரண்டு ஆண்டுகள் காடும் புதர்களும் மண்டிய ஒதுக்கிடமாக ஆலயம் மாறியது.

இதே வேளை, விக்டோரியா அணைக் கட்டுத் திட்டத்தின் போது இக்கோயிலைச் சார்ந்த நிலப்பகுதியும் அடங்கியதால், அதற்குரிய நட்ட ஈடாக மகாவலி அதிகார சபை எட்டு லட்சத்து பத்தொன்பதாயிரம் ரூபாவை வழங்கியது. இந்நிதியைப் பொறுப்பேற்க, முறையான ஆலய சபை இயங்காத காரணத்தினால் இத்தொகை இந்து சமய கலாசாரத் திணைக்களத்தில் வைப்புச் செய்யப்பட்டது.

1993ம் ஆண்டு உன்னஸ்கிரியதோட்ட முகாமையாளராகப் பொறுப்பேற்ற என்.ஐ.பி. சுவாமி அவர்கள் புதர்மண்டிக் கிடந்த ஆலயச் சூழலைக் கண்டு வருந்தி பிரதேச மக்களை அழைத்து ஆலயப்புனரமைப்புப் பற்றிக் கலந்துரையாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசசெயலாளரின் அனுமதியுடன்ஆலய புனரமைப்புக் குழு உருவானது:

1993ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ம் திகதி பிரதேச மக்கள் நூற்றுக் கணக்கில் ஒன்று சேர்ந்து சிரமதானப் பணிகள் மூலம் ஆலயத்தைச் சூழ்ந்த புதர்களை வெட்டி அழித்தனர். ஆலயத்தினுள்ளே பிரதான விக்கிரகங்களான முருகன், வள்ளி - தெய் வானை, விநாயகர், நவக்கிரகங்கள் என் பனவும் ஆலயமணியும் சேதமின்றி இருந் தன.

திரு. சுவாமி அவர்கள் தலைமையில் இந்து சமயத் திணைக்கள வைப்பிலிருந்த மகாவலி அதிகார சபை தந்த நிதியுடனும் பிரதேச மக்கள் அளித்த அன்பளிப்பு உதவிகளுடனும் ஆலயப் புனரமைப்பு வேலைகள் மிகச்சிறப்பாக நிறைவு பெற்றன.

கடந்த ஆகஸ்ட் 9ம்திகதி ஆலய கும் பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடி யது. சிவஸ்ரீ பரமேஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ இராமநாதக்குருக்கள், பிரம்மஸ்ரீ நாரா யணசர்மா ஆகிய சிவாச்சாரியர்கள் முன் னின்று கும்பாபிஷேகக் கிரியைகளை நிறை வேற்றிவைத்தனர்.

திணைக்களத்தின் சார்பில் உதவிப் பணிப்பாளர்களான திரு. வீ. விக்கிரம ராஜா, திரு. எஸ். தெய்வநாயகம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினர்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நாற் பது நாட்கள் மண்டலாபிஷேகமும் நடை பெற்றது. அக்டோபர் மாதம் 15ம் திகதி மிகச் சிறப்பாக தேர்த் திருவிழா நடை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

-அன்புச்செல்வன்-

## தேர்த் திருவிழா

சுவாலித்து எரியும் அக்கினியின் தோற்றத்தில் அமைக்கப்பட்ட தேரானது அழித்தலைக் குறிப்பது. தேரின் பாகங்கள் பிரபஞ்சத் தோற்றத்தையும், அதன் பீடம் இருதயத்தையும் குறிப்பன. அங்கு இறைவன் வீற்றிருந்ததும் தேர் ஓடுகிறது. வாழ்க்கைத் தேர் சிறப்பாக ஓடுவதற்கு நமது இருதய பீடத்திலே இறைவனை எப்போதும் எழுந்தருள வைத்திருக்க வேண்டும். தேர் சரியான பாதையில் ஓடுவ தற்கிசைவாகச் சறுக்குக் கட்டைகள் போட்டு அதனைக் கட்டுப்படுத்துவது போல, நமது வாழ்க்கையையும் நல்வழிகளில் நெறிப்படுத்த வேண்டும். மேலே கோபுரம் போல் குவிந்து செல்லும் தேர்க்கலச முடிவில் குடைநிழல் தெரிகிறது. மனம் குவிந்து மேலான சிந்தனையுடன் இறைவனைத் தியானித்தால் அவனது அருட்குடை நிழல் நம்மைத் துயர வெயிலிலிருந்து பாதுகாக்கும்.

தேர்க்காலிலே தேங்காயைச் சிதறு அடித்து நமது துன்ப துயரங்களைச் சிதற வைப்பதையும், வலிய தேங்காய் ஓடு பிரிந்து வெண்ணிற உட்பாகம் வெளிப்படச் செய்து மல நீக்கத்தை உருவகப் படுத்துவதையும் இந்தத் தேர்த் திருவிழாவில் காணலாம்.

தேரில் சுவாமி இருக்கையில் யாத்ராதானம் முதலியவற்றை வழங்கி விநாய கரைப் பிரார்த்தித்துத் தேங்காய் உடைத்ததும் தேர் புறப்படும்.

தேர் சுற்றி வந்ததும் சுவாமிக்குப் பச்சை சாத்தும் வழக்கம் எங்கும் உண்டு. உக்கிரமூர்த்தியாக அழித்தற் தொழில் முடிந்து வரும் இறைவனைக் குளிர்விக்கும் பாவனையே இது. சுவாமிக்குப் பச்சை சாத்துவது மட்டுமின்றி சிவாச்சாரியார்களும் உதவியாளர்களுங்கூட அவ்வேளையில் பச்சை வேட்டி சால்வைகளுடன் காணப் படுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

- திருமதி கலைவாணி இராமநாதன் -
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

''பொக்கமிக்கவர் சொரியும்
பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பர் நாயகர்
அவர்தமை நாணியே'' என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கிலிருந்து ''பொய்யும் வஞ்சனையும் நிறைந்த மனநடையார் ஆற்றும் பூசையினைக் கண்டு அவர்களது மறைந்தொழுகும் ஒழுக்கத்தைப் பார்க்கும் ஈசன் தனக்குத்தானே நகைப்பதுடன் அப் பூசைக்கு வெட்கப்பட்டு விலகி நிற்பர்'' என்னும் உட்பொருளானது ஆசாரமற்றவர்களது பக்தியையும் பூசைகளையும் சாடுவதாகவே உள்ளது.

''வஞ்சமனத்தான் படிற்றொ
ழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்'' என வள்ளுவப் பெருமான் இக்கருத்தினை சற்று மாற்றி ''கரவுடையான் ஒழுக்கத்தினைப் பார்த்து அவனுடன் ஒன்றாக வாழ்கின்ற இயற்கையே எள்ளி நகையாடும்'' எனக் கூறினார்.

இன்றைய நாளிலே ஆலயங்களில் எவ்வளவு பூசைகள், அபிஷேகங்கள், கும்பாபிஷேகங்கள், சங்காபிஷேகங்கள், மகோற்சவங்கள் நடைபெறுகின்றன! ஆகவே மக்கள் பூசைகள், கிரியைகளுடன் மட்டும் நின்றுவிடாது ஆலயங்கட்குத் திருப்பணி செய்வதில் காட்டும் ஆர்வம் போல, வறுமைப்பட்டவர்கள், ஊனமுற்றவர்கள், ஆதரவற்றோர், முதியோர், நோயுற்றோர், குழந்தைகள் என்றிவர்கட்குச் செய்யும் அறப்பணிகளிலும் போதிய ஆர்வம் காட்டுவது அவசியமாகும். அத்தகைய பணி அவரவர் தகுதிக்கேற்ப அமையலாம் என்பதனை—

யாவர்க்குமாம்
இறைவற் கொருபச்சிலை
யாவர்க்குமாம்
பசுவிற்கொரு வாயுறை
யாவர்க்குமாம்
உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம்
பிறர்க்கின்னுரை தானே'' எனவரும் திருமந்திரத்தால் அறியலாம். இதனை ''அறம் செயவிரும்பு'' என ஔவையும், ''வையகமும் துயர் தீர்க்கவே'' என சம்பந்தரும் கூட எடுத்துக் காட்டினார்கள். அப்பர் சுவாமிகளின் உழவாரத் தொண்டு என்பதனடியாகப் பிறந்த சமூகத் தொண்டும், அப்பூதியடிகளாரின் தண்ணீர்ப் பந்தல், அன்னதானமடம் போன்றனவும் சைவ அடியார்களின் அறப்பணிக்கு மேலும் முன்மாதிரியாக விளங்குபவையாகும்.

அறிவியல் முன்னேற்றமும் பொருளியல் முன்னேற்றமும் கண்ட மக்கள் அறவியல் முன்னேற்றத்தை இடையிலே கோட்டைவிட்டதனாற் போலும் தாம் அடையவேண்டிய இலக்கினை இழந்து அல்லலுற வேண்டியுள்ளது. ஆலய நிர்வாகங்கள் கூட திருப்பணி உண்டியல் வைத்து திருக்கோவில் பணிகளை நிறைவேற்றுவது போன்று ''அறப்பணி உண்டியல்'' என ஒன்றினையும் அருகருகே வைத்து ஆலயத்திருப்பணிக்குப் பொருள் ஈயும் மக்களிடம் ''அறப்பணிக்கும் பொருள் வழங்குக'' என ஊக்கமளிக்கும் முறையினை கடைப்பிடித்து வரவேண்டும். சமூதாய சேவையினை இவ்வாறு ஆலய நிர்வாகம் வாயிலாகவும் சமூகம் முன்னெடுக்கமுடியும். அல்லாவிடில் நலிந்த சமூகத்தைக் கொண்ட மக்களினால் ஆலயப் பணிகளும் நலிவடைய நேரும். இன்று நித்திய நைமித்திய கிரியைகள் நடைபெறும் பெரும்பாலான கோவில்களிலும் பல சீர்கேடுகள் மலிந்துள்ளதை நீதிமன்றங்கட்கு வரும் கோயில் வழக்குகள் எடுத்துக் காட்டுகின்றன, ஆரோக்கியமான சமுதாயத்திற்கு இந்நிலை உகந்ததல்ல என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியோர் உள்ளக் கருத்தாகும். உதாரணமாக:

''ஆதியிலே வழிபாட்டுக் கார்ந்த
பெரும் கோயில் பல
சாதி மதச் சாக்கடையாய்
சண்டாளர் இருப்பிடமாய்
நீதி அறம் அழிந்துவரல்
நின்மலனே நீ அறிவாய்
கோதுகளை அறுத்தொழித்துக்
குணம் பெருகச் செய்யாயோ''

என்ற இப்பாடலானது கோவில்கள் நிறுவப்பட்டதன் நோக்கத்தை அவை இழந்து விட்ட நிலையினையே காட்டுகிறது. ஆதலால் மக்கள் கூட்டமோ தங்கள் துயரத்திற்கு முடிவில்லையா? விடிவில்லையா? என முறையிடுவதனை நோக்குமிடத்து கந்தபுராண நீதிதான் நினைவில் உறுத்துகின்றது.

சூரபன்மன் மண்ணுலகில் ஆட்சிக்கு வந்து விட்டான் என அறிந்து நடுங்கிய பிரமா, இந்திரன் முதலிய தேவர்கள் திருமாலிடம் சென்று முறையிட்டனர். அதற்குத் திருமால் ''புன்தொழிலுடைய தக்கன் செய்த யாகத்திற்குப் புகுந்த தீமையினால் இது நமக்கு வந்தது. சிவன்தான் இதனை விலக்க வேண்டும். சிவநிந்தை செய்த பாவம் இவ்வாறு வந்தது'' என சிவசேவை மகிமையே துன்பத்தை விலக்க வல்லது என அறிவுரை பகர்ந்தார். 'செய்வினை செய்தவனைச் சென்றடையும்' எனற சித்தாந்த நீதி இங்குரைக்கப்பட்டது. சைவநீதிக்கு முன் தேவரும் விலக்கல்லவாம். இந்திரனும் திருமாலிடம்,

'அமரர்தம் வெம்சிறை வீடுமாறு
நெடிய தொல் வெறுக்கை தன்னை நீங்கிய
நமது துன்பம் முடிவதுமில்லை கொல்லோ
மொழிந் தருள் முதல்வ .. ''

என மீண்டும் வினவுகின்றான். பின் கயிலை சென்று சிவனை வழிப்பட்டு வேண்டுதல் செய்யும்போது 'யாரை நோவேன், யாரிடத்துச் சொல்வேன்' கடல் நடுவே காகத்திற்கு மரக்கலமல்லாது பிறிதோரிடமில்லையே, அது போல அடியேம் துயரத்திற்கு துணைவர் நீரன்றி யாவர் உளர். நஞ்சையுண்டு இறக்கவும் முடியவில்லையே அமிர்தத்தை உண்டு சாகா வரம் பெற்றுவிட்டேனே, கருணாநிதியே! காத்தருளும் என வேண்டுகிறான். ஒரு சமயம் சூரனுக்குப் பயந்து மனைவியுடன் தலைமறைவாகியும் விடுகிறான். சயந்தனும் பெற்றவர் சென்ற இடம் தெரியாது கலங்கி சூரனால் சிறைப் பிடிக்கப்படுகின்றான். சயந்தனின் துன்பத்தைத் தேற்றக் கருதி நாரதர் அவனிருப்பிடம் சென்றார். சயந்தனோ எல்லையற்ற துன்பத்திலே நாரதரிடம் ''ஐயனே! இச்சிறை ஆற்றேன், ஆற்றேன், அறம் தொலைந்ததோ பாவம் சிறந்ததோ தவப் பயனும் தேய்ந்ததோ நன்னெறி குறைந்ததோ எனப் பலவாறு புலம்பி மயங்கினான்.

ஒரு சமயம் பாண்டிய மன்னனும் மணிவாசகப் பெருமானுக்கு வைகைக் கரையிலே அணை உடைப்பெடுத்த சமயம்— அமைச்சரான அவர் உரிய நேரத்திலே அணைக்கட்டு வேலை முடிக்கவில்லையே எனச் சினந்து அங்கு மாணிக்கவாசகருக்காக கூலியாளாக வந்த சிவனுக்கு பிரம்பால் அடித்த அடி அனைவருக்கும் விழுந்த அடியானது. எல்லோரும் துன்பப்பட நேர்ந்ததும் தான் என்ன குற்றம் செய்தேனோ தவறு விட்டேனோ என பாண்டிய மன்னன் மனம் நொந்து போனான்.

''ஆதியாம் கடவுள் ஆலவாய்
அமலன் மங்கை
பாதியான் கடந்த பூசை
பண்டையில் குறைந்ததுண்டோ
நீதியான் தவத்தின் மிக்கார்
நெஞ்சகம் புழுங்க மண்மேல்
தீதுயான் செய்ததுண்டோ
செப்பும் அமைச்சர்காள்''

என்றவாறு அடியவர்களையோ, அறவோர்களையோ யான் நிந்தித்த பாவம் தான் இவ்வாறு விளைந்ததோ? என விம்முகிறான். மாணிக்கவாசகப் பெருமானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பெருமையறியாது நிந்தித்தமையினை பின் மன்னன் உணர்ந்து கொண்டான். இவ்வாறு தக்கன் யாகத்திற்குச் சென்ற தவறு இந்திராதி தேவர்களை தீவினையாகச் சென்றடைந்தது எனவும், பெரியோர்களை அவமதித்ததால் நாட்டில் துயரவெள்ளம் ஏற்பட்டதென்றும் இச் செய்திகளைப் பார்க்குமிடத்து தேவர்களாயினுமென்ன? மன்னனாயினுமென்ன எவ்வளவு பூசைகள், தவங்கள் செய்தாலும் என்ன செய்த தீவினைக்குத் தண்டனை பெற்றேயாக வேண்டும் என்றே சைவநீதி போதிக்கின்றது. ஆகவே எத்தனை சோதனைகள் வேதனைகட்கு மத்தியிலும் பிறர் மனம் நோக நடவாதிருப்பதும் செய்நன்றி மறவாமையும் ஈசன் பூசைகளில் தவறாமையும் சமூகநலம் பேணுதலுமே உயர்ந்த அறவாழ்வாகச் சொல்லப்படுகின்றன. தாம் தாம் அறிந்தோ அறியாமலோ செய்த தவறுகளே இன்று தண்டனையாக வந்து தம்மை வருத்துகின்றதென்பதனை இப் புராண வரலாறுகள், மெய்யடியார் வாழ்க்கை முறைகளில் இருந்தும் அறிந்து நடத்தல் வேண்டும் என்பதே அவற்றிலே கூறப்படும் அறிவுரையாகும்.

துயரத்தின் எல்லையில் இருக்கும் இந்திராதி தேவர்கட்கு இறுதியாக நாரதர் 'ஈசனை மதியாத தக்கன் யாகத்திற்குச் சென்ற 'சிவநிந்தை' என்ற பாவமே இங்ஙனம் சூரபன்மன் என்ற துயரமாகச் சூழ்ந்தது. உங்கள் துயரம் ஈசன் அறிவான் ஆயினும் அவரவர் செய்த தீவினையின் பலனை அவரவரே அனுபவிக்க வேண்டுமல்லவா? அதனால் உங்கள் தண்டனைக் காலம் முடிய சிவனருளால் தோன்றும் சிவகுமாரனால் உங்கள் துயர் தீரும்' எனத் தேற்றுகிறார். எனவே எல்லாவற்றுக்கும் பிராயச்சித்தம் உண்டு. ஆனால் சிவநிந்தை என்ற பாவத்திற்குப் பிராயச்சித்தமே கிடையாது எனக் கந்தபுராணம் விளக்குகின்றது. அப்படி இறைவன் மன்னித்து உடன்வாழ்வு வழங்கினால் யாரும் எதுவும் செய்யலாம். பின்னர் மன்னிப்புக் கேட்டு வாழ்வு பெறலாம் என்ற நிலை ஏற்படுமல்லவா. ஆதலால் தருமமானது அவரவர் செயல்களின் நன்மை தீமைகட்கேற்பப் பலன்களை வழங்கும் நியதி இதனால் பெறப்படுகின்றது. தேவர்கட்கே இந்நிலை எனில் எம்போன்ற மானிடர்கள் எம்மாத்திரம் என நினைத்து இறைவனைப் போற்றி, அறப்பணிகளை ஆற்றி ஆறுதல் அடைய முயல வேண்டும். இதுவே புராண வரலாறுகள் கற்பிக்கும் பாடமாகும்.

''சென்ற காலத்தின் பழுதிலாத் திறனும்
இனி எதிர் காலத்தின் சிறப்பும்
இன்றிங்கெழுந்தருளப் பெற்ற
பேறிதனால்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும்
வென்றிகொள் திருநீற் றொளியினில்
விளங்கிடும் மேன்மையும் படைத்தனம்
என்றார்''
—(சேக்கிழார்) பெரியபுராணம்

'மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.
—கந்தபுராணம்.

'யாம் பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகம்'
—திருமந்திரம்.

**சப்தரிஷிகள்**

(ஒருவகை) அகஸ்தியர், ஆங்கீரசர், கௌதமர், காசியபர், புலஸ்தியர், மார்க்கண்டேயர், வசிஷ்டர்.

(இன்னோருவகை) அத்திரி, ஆங்கிரசர், கௌதமர், ஜமதக்னி, பாரத்துவாஜர், வசிஷ்டர், விஸ்வாமித்திரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய வாழ்வு

பண்டிதர் இணுவையூர் கா. செ. நடராசா

''சமயம்'' என்ற சொல்லுக்குப் பல விதமாகப் பொருள் கூறுவர். வாழ்வு நன்றாகச் சிறப்புற அமைவதற்கு ஒவ்வொரு மனிதர்களுக்கும் சமயம் வேண்டும். இப்படிக் கூறினால் அது வாய்ப்பு. சந்தர்ப்பம் என்ற பொருள் தரும். இதனை ''நல்ல சமயமடா இதை நழுவ விடுவாரோ'' என்ற தொடர் மூலம் நாம் அனைவரும் உணர்ந்துள்ளோம். ஆயின் இச்சமயம் என்ற சொல்லுக்கு வழிபாட்டு நெறி என்ற பொருளும் உண்டு. வாழ்வுக்கு வழிபாடு நலம் செய்வது. வழிபாடு என்றால் உலகியல் கருத்தில் வாழ்வின் பக்கம் என்பது பொருள். (வழி = பாதை; பாடு = பக்கம்) எமக்குறிய வாழ்வின் பக்கம் எது? எனச் சிந்திப்பதே சமயம். அதனை நழுவ விடாமல் பயன் கொள்வதே சமயம். சிந்தனை, நடைமுறை வாழ்வில் இடம் பெறும் பொழுது அது சமயம் எனப்படும்.

எண்ணம் ஒவ்வொன்றும் வாழ்வேட்டில் பதிவு பெறுகின்றது. இப்பதிவே எமது விதியாகின்றது. இந்த எண்ணம்-எண்ணத்தினால் ஏற்படும் பதிவு எப்படி ஏற்படுகின்றது? எம்மைச் சூழ்ந்துள்ள பொருட்களால், எமது உடலில் அமைந்துள்ள கண், காது - மூக்கு தொடு உணர்ச்சிக்கிடமான உடல் என்பவற்றால் ஏற்படும் நினைவு அலைகள் உள்வெளியில் படிவு பெறுகின்றன. இவ்வலைகள் தடிப்பு அடையும் பொழுது மனம் என்ற பெயரைப் பெறுகின்றது. இம்மனம் உயிர் எனக் கூறப்படும் ஆத்மாவின் திரையாக அமைவு பெறுகின்றது. இத்திரையில் காணும் அதாவது மனதில் காணும் காட்சியினைக் கொண்டு மனமே நான் என எண்ணுகின்றோம். நாம்; மனம் அல்ல-மனதின் சுவட்டனுபவங்களை வெளியிடும் புத்தியல்ல. அதற்கும் அப்பாற்பட்ட நான் தான் அது.

நண்பர்-அல்லது உறவினர் வீட்டுக்குச் செல்கின்ற பொழுது வாயிற்புறத்தே நின்று அழைப்பு விடுகின்றோம். அவ்வழைப்பினைக் கேட்பவர் யார் அது எனக் குரல் கொடுப்பார். அதற்கு நாம் பதிலாக நான் அது எனக் குரல் கொடுக்கின்றோம். இது அன்றாட வாழ்வில் நடை பெறும் நிகழ்வுகள். ஆயின் அதன் உட்பொருள் விளக்கத்தினை யாரும் ஊன்றிச் சிந்திப்பதில்லை.

யார் அது என வினவும் பொழுது அது வாகிய பிரமம் உலகியலில் என்ன பெயர் வடிவு (நாமரூபம்) கொண்டு இங்கு வந்துள்ளது என்பதே தொனிப் பொருள். இதனை அப்பர்; அப்பன் நீ. அம்மை நீ. அன்புடைய மாமனும் மாமியும் நீ எனக் குறிப்பதோடு அனைத்துமே நீ எனக்கூறக் கேட்கின்றோம். நாம் உணர்வதில்லை. ஆயின் நடைமுறை உரையாடலில் நான் அது என்றே கூறுகின்றோம். அந்தப் பிரமமான இறையே **நான்** ஆக வந்துள்ளேன் என்பதனை எங்கள் ஆத்ம உணர்வு வெளியிடுகின்றது ஆனால் அவ்வழி நிற்பதனை மனமாகிய திரை மறைக்கின்றது.

இறை அல்லது பிரமம், மனித உணர்வுக்கு எட்டியமுறையில் சிந்திக்கும் பொழுது அது மனித வடிவு கொண்டதாகவே வடிவு பெறும். பிரமம் அனைத்திலும் இடையீடின்றி நிறைந்துள்ளது. நீக்கமற நிறைந்துள்ள அப்பொருள் இல்லாது எதுவுமே எங்கும் இருந்ததில்லை, இருக்கப்போவதுமில்லை. இதனை உணர்ந்து வாழ்வதற்கு பழமை நெறி வாழ்ந்த எம்முன்னவர்கள், பல வழிகளைக் கண்டு அவ்வழிகள் மூலம் உட்பொருள் தெளிவினைக் கூறியுள்ளனர். அதனால் தான் மண்ணும் — கல்லும் — புல்லும்—செடியும் - மரமும்—ஊர்வன— பறப்பன போன்ற அனைத்துமே வணக்கப் பொருளாயின, சமயச் சின்னங்களாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை அனைத்தும் மனித வாழ்வுக்கு நலம் செய்வன. அவர்கள் கூறிய வழியில் கொடுமை புரிவதற்கு இடம் இல்லை. கொடியவர்கள் எனக் கூறுவதற்கு யாரும் இல்லை. நல்லியல்பு இல்லாது யாரும் வாழுதல் இயலாது, வனவிலங்குகள் உட்பட அனைத்து உயிர்களும் தம் வழிவந்தவற்றிடையே பேரன்பு என்னும் நல்லியல்பு உடையனவாகவே இருக்கின்றன. நல்லியல்பு இன்றேல் அவை உயிர் வாழுதல் இயலாது. இவை தம் வழித்தோன்றல்களை அழித்து உண்பதில்லை. பகை கொண்டு கொலை புரிவதில்லை. நாம் உயர்ந்தவர்கள், மேலோர்கள், அறநெறிவந்த சான்றோரை எமது ஆசாரியர்களாக, குருமாராகத் தெய்வங்களாகப் போற்றி வழிபடுபவர் எனக் கூறுபவர்களான மனிதர்களே நாகரிகம் பெற்றவர் என நினைப்பவர்களே மனித சமூகத்திற்குத் தீங்கிழைக்கின்றனர். எனவே நாம் எந்த வகையில் உயர்ந்தவர்கள்? எமது உட்பொருள் இயல்பு என்ன? நாம் பிறருக்குக் கொடுமை செய்யவா பிறந்தோம்? இப்படிச் சிந்திக்கும் பொழுதே மனிதன் சமயி ஆகின்றான்.

''தன்னைத்தான் காதலன் ஆகில் எனைத்து ஒன்றும்
துன்னற்க தீவினைப் பால்'' என்பது தமிழ் மறை. (குறள்)

நாம் சமயி ஆக வாழ்வதற்குரிய முதல் படி எம்மில் அன்புடையவராக இருப்பதே. இந் நிலையே துன்பம் அற்றது. இத்தகைய வாழ்வில் போட்டி பொறாமை இல்லை. பிறர்க்குக்கேடு செய்தல் இல்லை தன்னைத் தான் காதலிக்கும் ஒருவன் அனைத்து உயிர்களிடமும் அன்புடையவனாக இருப்பான். அன்பற்ற வாழ்வுக்குரியவர் அழிந்துபடுவர். அழிவில் இருந்து நாம் மீளுதல் வேண்டும். அதற்கு வழியின் பக்கம் (வழிபாடு) பார்த்துச் செல்லுதல் வேண்டும். அதற்குச் சமயம் துணை செய்கின்றது. மனிதப்பிறவி கிடைத்த இந்தச் சமயமே அதனை நழுவ விடாது பயன் கொள்வோம். இப் பயன்பாடே மனிதர்களைச் சமயி ஆக்கும்.

### யோகசித்தி

யோக சாதனையினால் கைகூடும் சித்திகளைப்பற்றி யோக சாத்திரங்கள் கூறுவதுண்டு. இச்சித்திகளை எட்டு வகையாக விளக்கி இவற்றை அட்டமாசித்தி என்பர். அவை:

1. அணிமா — அணுப்போலாதல்
2. மகிமா — பேர் உருக்கொள்ளுதல்
3. கரிமா — மிக்வும் கனமாதல்
4. லகிமா — கனமற்றுப்போதல்
5. பிராத்தி — விரும்பியவனைத்தையும் பெறுதல்
6. பிராகாமியம் — நினைத்த மாத்திரத்தில் ஒன்றை அடைதல்
7. ஈசத்துவம் — எல்லாவற்றுக்கும் மேலான தலைமைத்துவம்
8. வசித்துவம் — தன் வசமாக்குதல்

இவை உண்மையில் யோகசாதனையில் இடையே வந்து தோன்றுவனவே. இச்சித்திகள் தெய்வப் பேற்றுக்கு இட்டுச்செல்வன எனக் கருதப்படுதல் இல்லை. தெய்வப்பேற்றையே இலட்சியமாகக் கொண்டு அதில் உறைந்து நிற்போர் இத்தகைய சித்திகளில் கவனம் செலுத்துவதில்லை.

இந்நெறியின் மூலம் ஒருவர் முன்னேறிச் செல்வதைத் தெளிவாக உணர முடியும் என்றாலும், தக்க குருவில்லாத நிலையில் இதனைப் பின்பற்றலாகாது என்பர். முறையாகப் பின்பற்றப்படாத நிலையில் கேடுவருவதற்கும் இடமுண்டு என்று கருதுவதால், இதனை எல்லோருக்கும் விதிப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறவா நிலை

சேக்கிழார் சுவாமிகளால் புகழ்ந்து பேசப்பட்ட அறுபத்துமூன்று நாயன்மார் களில் திருமூலர் ஒருவர். இவர் சிறந்தஞானி யாக விளங்கியவர். ஞானம் முதலிய நான்கு நெறியினைத் தெள்ளு தீந்தமிழால் அருளிச் செய்த சான்றோர்களில் தலையாயவர்.

''உள்ளுணர் வானஞான முதலிய வொரு நான்குண்மை தெள்ளுதீந் தமிழாற் கூறுந்திருமூலர்'' என்பது சேக்கிழார் வாக்கு. சமயகுரவர் நால்வரில் சுந்திரமூர்த்தி சுவாமிகள், ''நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்'' என்று வாயாரப் புகழ்ந்து பாராட்டுகிறார்.

''குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல
மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன்
றன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி
யேபர விட்டென்னுச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூல
னாகின்ற அங்கணனே''

என்று திருமூலரின் வரலாற்றை நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியில் சுருக்கமாகக் கூறுகிறார்.

இவர் வாழ்ந்த காலம் சரியாகத் தெரியவில்லை. தற்கால ஆராய்ச்சியாளர்கள், கி.பி.மூன்றாவது நூற்றாண்டிலிருந்து ஐந்தாவது நூற்றாண்டுக்குள் வாழ்ந்திருக்கலாம் என்ற கருத்தினைத் தெரிவிக்கிறார்கள். ஆனால் பலகாலம் சாவாமூவா நிலையில் இருந்திருக்கிறார் என்பது மட்டும் இவரது பாடல் வரிகளால் புலனாகிறது.

''தப்பில்லா மன்றில் தனிக்கூத்துக்
கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம்இருந்தேனே''

என்பது அப்பகுதி.

இவர் அருளிச் செய்த நூல் திருமந்திர மாலையாகும்.

''ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந் திரமாலை'' என்ற சேக்கிழார் திருவாக்கால் நூலின் பெயர் விளங்கும்.

''மூலன் உரைசெய்த மூவாயிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது''

என்ற திருமூலர் வாக்கால் இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது என்பது புலனாகும். இதனைச் சைவத் திருமுறை பன்னிரண்டில் பத்தாவது திருமுறையாகப் பெரியோர் தொகுத்துள்ளனர். இதனுள் நெஞ்சை உருக்கும் பாடல்கள் பல உள.

''முத்தினின் முத்தை
முகிழிள ஞாயிற்றை
எத்தனை வானோரும்
ஏத்தும் இறைவனை
அத்தனைக் காணா
தரற்றுகின் றேனையோர்
பித்தன் இவனென்று
பேசுகின் றாரே''

என்று உருகிப் பாடுகின்றார் திருமூலர். இதனைவிடச் சிறந்த தோத்திரம் எங்கு காணமுடியும்? இதனைத் தோத்திர நூலாக மட்டுமின்றிச் சாத்திரமாகவும் பெரியோர் மதித்துப் பாராட்டியுள்ளனர். பதிபசுபாசம் அல்லது இறை உயிர்த்தளையாகிய முப்பொருள் உண்மையைக் கூறுவதே சாத்திரமாகும்.

''பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு
பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே''

என்ற இம் மந்திரத்தால் எத்துணைத் தெளிவாகச் சாத்திரக் கருத்துக்கள் விளக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டுள்ளன! 'தோத்திரத்தில் திருவாசகமும் சாத்திரத்தில் திருமந்திரமும் ஊன்றிப் படிக்க' என்ற இராமலிங்க அடிகளின் ஆணைமொழியால் இவ்வுண்மையை உணரலாம்.

இனி, இதனை ஒரு சிறந்த வாழ்க்கை நூலாகவும் கொள்ளலாம். வாழ்க்கைக்கான சீரிய அறங்கள் இங்கு பேசப்பெறும். கொல்லாமை, புலால் மறுத்தல், பிறர் மனை நயவாமை, கள்ளுண்ணாமை, அன்புடைமையாகின்ற அறங்களைப் பற்றி இவர் கூறும் முறையே மிகச் சிறப்புடைய ஒன்றாகும். இந்திரியங்களை அடக்கு முறைமையைப் பற்றிக் கூறுவர்:

''அஞ்சும் அடக்கடக் கென்பர்
அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும்
அங்கிலை
அஞ்சும் அடக்கில் அசேதன
மாமென்றிட்
டஞ்சும் அடக்கா
அறிவறிந்தேனே''

என்பது அவர் வாக்கு. ஐந்து இந்திரியங்களையும் அடக்க வேண்டும் என்று அறிவில்லார் கூறுவர். ஆனால் இந்திரியங்களை அடக்கவும் முடியாது; அடக்குவதால் பயனும் இல்லை. அவற்றோடு கூடியிருந்தே அவை பெற்ற பயனை அடைந்து விட வேண்டும் என்பது அவர் கருத்து. இவ்வுபதேசம் வாழ்க்கைக்கு எத்துணைப் பொருத்தமுடையதாவுள்ளது. ஆதலின் உலக இன்பங்களை நன்முறையில் துய்த்துக் கொண்டே பேரின்பம் பெற முடியும் என்பதே திருமூலர் உள்ளக்கிடக்கையாம்.

''பெற்றசிற் றின்பமே பேரின்ப
மாயங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது மாயையென்
றுந்தீபற''

என்ற ஞான நூலாகிய திருவுந்தியாரும் இவ்வுண்மையினையே கூறுகிறது.

அடுத்துச் சரீர சித்தி உபாயத்தைக் கூறும் பகுதி திருமந்திரத்தில் மிகவும் சிறப்புடையது:

''உடம்பார் அழியில் உயிரார்
அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ்
சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம்
அறிந்தே
உடம்பை வளர்த்தேன்
உயிர்வளர்த்தேனே''

''உடம்பு அழிந்து விடுமாயின், உயிர் அடைய வேண்டிய பயனை அடைய முடியாது. உயிர் அடைய வேண்டிய பயன் மெய்ஞ்ஞானமாகும். அதனைப் பிறந்த பிறப்பிலேயே பெற்றுவிட வேண்டும். ஆதலின் உடம்பை வளர்க்கும் உபாயத்தை அறிந்து உடம்பை வளர்க்க வேண்டும். அப்போது தான் உயிர் பெற வேண்டிய பயனைப் பெற முடியும்' என்பது இம்மந்திரத்தின் கருத்தாம். உடம்பை வளர்க்கும் உபாயத்தினை அறிய வேண்டுமா? அது தானே வாழ்க்கையின் குறிக்கோள்!

''முகத்திற் கண்கொண்டு
காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு
காண்பதே ஆனந்தம்''

என்று உடம்பின் அகத்தை நாடவேண்டும் என்கிறார் ஆசிரியர்.

உடம்பினுள் ஆறு ஆதாரங்கள் உண்டு. என்று யோக நூல் கூறும். அவை மூலாதாராம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்பனவாம். ஆஞ்ஞைக்கு மேலிடம் பிரமரந்திரம் என்பர். மூலாதாரம் என்பது குதத்துக்குப் பக்கத்திலுள்ளது. குதத்துக்கு மேலும் நாபிக்குக் கீழும் உள்ளது சுவாதிட்டானம். நாபித்தானம் மணிபூரகம்; நெஞ்சு அநாகதம்; கண்டம் விசுத்தி; புருவநடு ஆஞ்ஞை; சிரசு உச்சி பிரமரந்திரம் — இவை இடங்களாம். இவற்றைச் சக்கரங்கள் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவர். தற்கால மருத்துவ நிபுணர்களும் இம்மாதிரி சக்கரங்கள் உடம்பில் உள்ளன என்று கூறுகின்றனர்.

இத்துணைச் சக்கரங்களையும் இணைப்பது நடுநாடியாகிய சுழுமுனை; இது மூலாதாரம் தொடங்கிப் பிரமரந்திரம் வரையிலும் ஊடுருவி அதற்கப்பாலும் செல்லுகின்றது. இதன் அடிப்பாகம் அக்கினி மண்டலம் என்றும், நடுப்பாகம் சூரிய மண்டலம் என்றும், புருவ நடுவுக்கு மேல் பகுதி சந்திர மண்டலம் என்றும் கூறப்பெறும். மனிதனிடம் உள்ள அறிவே அக்கினிச் சக்தியாகவுள்ளது. அறிவு போகப் பொருள்களின் வழிச் செல்லும் போது உடலில் கீழ்ப் பகுதிகள், உணர்ச்சி மிகுந்து காமாக்கினியை எழுப்பி உஷ்ணத்தைத் தூண்டி நிற்கும். இவ்வறிவு உலகைச்சுட்டி அறியாத போது கருவி கரணங்களின் போது தொழில் நிலை கெடும். அதனால் உடம்பில் அக்கினியின் கூறுகெட்டு அதே அக்கினி, ஒளியாக மேலே பிரகாசிக்கத் தொடங்கும். கீழேயுள்ள சக்தி எண்ணத்தினால் தூண்டி நடப்பது. மேலேயுள்ள ஒளிமயமான சக்தி எண்ணற்ற அகண்ட சக்தி. சிந்தனை அகண்டமான போது சிந்திப்பவனாகிய ஆன்மாவின் திறனும் அகண்டமாகிறது. இதையே எண்ணமிலா அன்பு என்கின்றது திருவாசகம். தாம் கொண்ட உருவத்தைக் கடந்து அகண்டாகாரமாகச் சிந்தனை செய்பவரிடம் உயிரையும் உருவத்தையும் பிரிக்கும் எமனுக்கு வேலையில்லை. கீழுள்ள அக்கினியைப் பிரகாசிக்கச் செய்யும் எண்ணத்தை மேலே செலுத்துதலினால் இஃது அங்கியோகம் என்று பெயர் பெற்றது. சில ஹடயோகிகள் பிராணஜயம் அடைய முயற்சி செய்து பயன் பெறுகின்றனர். ஞானயோகிகள் பிராணனை ஜயிக்க முற்படாமல் சிந்தனையை மாற்றி அகண்டத்தை அடைந்து பிராணனை ஜயித்து இறவா நிலை அடைகிறார்கள்.

நன்றி; திருவிடைமருதூர்
கும்பாபிஷேக மலர்.

## சிறு தெய்வங்கள்

வேதாகமங்களை ஏற்று, அவ்வடிப்படையில், திருக்கோவில்களை அமைத்து, இறைவன் உருவத்திருமேனியை வழிபட்டு வருதலே தக்கது. இத்தகைய வழிபாடுகளுக்கு வேறாகவும் சில வழிபாடுகள் இந்துக்கள் நடுவே இடம் பெற்றுள்ளன. இவ்வாறு வழிபடப்படும் வடிவங்கள் தெய்வத் திருக்கோலங்களல்ல. இவ்வழிபாடுகள் பரம்பரை பரம்பரையாக நம்மிடையே நிலவி வரினும், இவை இடத்துக்கு இடம், காலத்துக்கு காலம் மாறியுள்ளமையும் கருதத்தக்கது. இவ்வுருவங்கள், சில சக்திகளை எதிரொலிக்கின்றன என்பதில் ஐயமில்லை. சில நேரங்களில் சில நன்மைகளையும் சில நேரங்களில் சில தீமைகளையும் இவற்றால் செய்யமுடியும். ஆயின் ''தெய்வீகசக்தி'' என்று இவற்றைக் கூறமுடியாது. வாழ்க்கை இலட்சியத்தை நோக்கி நம்மை வழிநடத்தி நிலையான இன்பத்தை இவற்றால் நமக்குத் தரமுடியாது. இவற்றுள் பல காலமாகிவிட்ட முன்னோர்களை நினைத்து வணங்கும் வழக்கத்தால், ஏற்றுக்கொண்டுள்ள வழிபாடுகளாயினும் இச்சக்திகளால் பலருக்கும் தீங்கிழைக்க முடியும் என்ற நம்பிக்கையும் இவ்வழிபாடுகளுக்கு ஒரு காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டாள் அமுதம்

''மாதங்களில் நான் மார்கழி'' என்கிறான் கீதையிலே கண்ணன். அத்தகைய மகிமை பெற்ற மார்கழியின் இளங்காலைப் பொழுதில் பெண்கள் கண் விழித்து ஏனையோரையும் எழுப்பிக் கொண்டு, நந்தகோபனான கண்ணனின் மாளிகை சென்று, கண்ணனையும் நப்பின்னை பிராட்டியையும் எழுப்புவதற்காக பள்ளியெழுச்சி பாடி நோன்பிருக்கத் தேவையாவன யாவை என விண்ணப்பஞ் செய்கிறார்கள்.

இந்த அழகிய காட்சியை திருப்பாவை எனும் பாசுரம் மூலம் அழகுறக் காட்டுகின்றாள் ஆண்டாள். கண்ணனைக்காண அலைந்து திரிந்த ஆண்டாள் திருவாய்ப் பாடியில் பெண்கள் மார்கழி நோன்பு நோற்று, கண்ணனைப் போற்றியதை அறிந்து, அந்த உணர்வைத் தானும் அனுபவித்து திருப்பாவையாகப் பாடினாள்.

இளம் பெண்கள் வைகறைத் துயிலுணர்ந்து நீராடி நோன்பிருந்து கண்ணனைப் போற்றுவதாக திருப்பாவைப் பாடல்கள் உணர்த்தினாலும், இவை ஆழமான தத்துவக் கருத்துக்களை உள்ளடக்குகின்றன. இவை உயிர்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பையும், இறைவனுடன் உயிர்கள் கூடியிருத்தலே இன்பம் என்பதையும் இறைவனது அடியார்களுடன் கூடி வாழ்வதே இன்பம் என்பதையும் உட்பொருளாக உணர்த்துகின்றன. முப்பது பாசுரங்களைக் கொண்ட திருப்பாவை வேதக் கருத்துக்களை உள்ளடக்கி அதன் சாரமாகவும் விளங்குகின்றது. இறைவனுக்கே உரிய ஆன்மாவானது நெடுங்காலமாக இறைவனை அணுகாது வருந்திய வருத்தம் தீர இறைவனை நாடி அவனது திருவடிகளை வணங்கி திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடிப் போற்றுவதாக இப்பாசுரங்கள் அமைந்துள்ளன. இதன் மூலம் ஆன்மாக்கள் உய்வடைய வேண்டும் என்பதே உட்கருத்தாகும். அத்தகைய அருட் சிறப்புமிக்க ஆண்டாள் அமுதத்தின் துளி ஒன்றை நாம் சுவைத்து உணரலாம்.

ஆழிமழைக் கண்ணா! ஒன்று நீ
கைகரவேல்
ஆழியுட் புக்கு முகத்து
கொடார்த் தேறி
ஊழி முதல்வனுருவம் போல்
மெய் கறுத்துப்
பாழியந் தோளுடைப்
பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல்
நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த
சரமழை போல்
வாழ உலகினில் பெய் திடாய்—
நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ
ரெம்பாவாய்.

இப்பாடலின் பொருள்

மண்டல வர்ஷ த்திற்கு
நாயகனானவனே
நீ ஒளிக்காமல் மழை பெய்ய
வேண்டும்
பெருங் கடலுள் ஆழப் புகுந்து,
நீரை
முகந்து கொண்டு பெரு
முழக்கத்தோடு ஆகாயப்
பரப்பில் ஏறவேண்டும்.
உலகுக்குக் காரண
மானவனுடைய திருமேனி
போல் உன்
மேனி கறுத்து பதிமநாபனுடைய
பருத்த வலிமைமிக்க
வலக்கரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய சக்கரத்தைப்
போல
பிரகாசித்தும் அவனது
இடக்கரத்தில்
உள்ள வலம்புரிச்சங்கு போல்
நிலை நின்று
முழக்கம் செய்தும், வில்லிலிருந்து
புறப்படும் அம்புகள் போல
பொழிய வேண்டும்
கண்ணனோடு கூடுவதற்காக
நோன்பு
நோற்கும் நாங்களும்
மார்கழி நீராட
உடனடியாக மழை
பெய்தருள்வாயாக!

இப் பாடலின் உட்பொருளையும் நாம் பின்வருமாறு உணர்ந்து கொள்ளலாம்.

ஞான மண்டலத்திலிருந்து பொழியும் ஆசாரியன் மூலமாக பரந்த வேத இதிகாச புராண கருத்துக்களை ஆழ்ந்து ஆராய்ந்து - சிஷ்யர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும். இறைவனின் படைப்புகளான ஆசாரியர்களும் ஞானத்தை யோகத்தின் ஒளியினாலேயே பெற்றனர். அவர்களின் திருமந்திரத்தால் வினைகள் நாசமடையும். அதனால் நாம் இறைவனை நன்குணரக்கூடும். இறைவனுடைய கருணையினாலே நாம் ஆசாரியனுடைய அருளைப் பெற்று இறைவனது திருவடிகளை அடைந்து மகிழ்வோம் என இப் பாடலின் ஆழ்பொருள் உணர்த்துகின்றது.

இங்ஙனம் ஆண்டாள் அமுதமான திருப்பாவைப் பிரசுரங்கள் தெவிட்டாத தேனாக தித்திக்கின்றன. படிக்கப் படிக்க இன்பமூட்டி இறையுணர்விற்கு எம்மை இட்டுச் செல்கின்றன. இந்த மார்கழித் திங்களில் இவை இன்னும் எமக்கு மகிமை கூட்டும். ஆண்டாளோடு இணைந்து நாமும் ஆனந்தக் கண்ணனின் அடியிணை போற்றி அகங்களிப்போமாக.

- அன்புச்செல்வன்

## கிராம தேவதைகள்

இந்துக்கள், சாத்திரங்களை ஒட்டிப்பிரதிட்டை செய்யாமல் தெய்வாம்சங்கள் பொருந்தியனவாகவோ, பெரிய தலைவர்கள் என்ற நிலையில் கருதியோ, சில உருக்களை மண்ணாலோ மரத்தாலோ செய்து, பாரம்பரியமுறையில் வழிபாடு நிகழ்த்திவரும் வழக்கும் உண்டு. ஊருக்கு இடர்வராமல் காக்கும் தெய்வமாகக் கருதி இவற்றுக்கு பூசை செய்வர். இங்கு நடைபெறுவது சாத்திர முறைப்படியான பூசை எனக் கூறமுடியாது. இத்தெய்வங்களையும், நடத்தும் பூசை முறைகளையும் கொண்டே கிராம தேவதை (Village Deity) எனக் கூறிவருகின்றனர். ஆயின் கிராம தேவதைகளில் பல தெய்வாம்சங்களோடு பொருந்தியவை. இவை இறைவன் அருட்கோலம் என்ற நிலையில் சாத்திர முறைப்படி வழிபாடு செய்யப்படின், அப்போது ஊர்க்காவல் தெய்வ-வழிபாடு என ஒதுக்க முடியாது. கிராம தேவதை என்று பலவிடங்களில் வழிபடப்படும் ஐயனார் மலையாள இந்துக்களால் - இன்று பல தமிழ் இந்துக்களாலும் - பரம்பொருளாவே வழிபடப்பட்டு வருவதை நாமறிவோம். ஐயனாரைச் (சாத்தா) சிவபிரான் மகனாக தேவார ஆசிரியர்களும் குறிப்பிடுவர்.

மாரியம்மனும் ஒரு காலத்தில் கிராம தேவதையாகச் சமுதாய வழிபாட்டை ஏற்று நின்ற நிலை உண்டு. இன்று மாராசுரனை வென்ற பராசக்தியாக மகா மாரியாக கருதப்பட்டு சாத்திர ரீதியில் அமைந்த பூசையினை ஏற்று மகிழ்வதைக் காண்கிறோம். சாத்திரங்களும் இவ்வணக்கத்தை ஏற்றுள்ளன. மண்ணாலும் மரத்தாலும் செய்யப்பட்டுவந்த திருவுருவங்கள், கல்லில் செய்யப்பெற்று முறையாகப் பிரதிட்டை செய்யப்படுகின்றன. ஸ்ரீராமகிருஷ்ணர் போன்ற பெரியவர்களும் காளி தேவியைப் பரப்பிரம்மமாகக் கருதியே வழிபட்டனர். தெய்வாம்சம் பொருந்தியதாகக் கருதப்படும் திருக்கோலங்களுக்குச் சாத்திர முறையான பூசைகள் செய்து வழிபடலே தெய்வீக வாழ்க்கைக்குத் துணைசெய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஷ்டி விரதம்

திருமுருக கிருபானந்தவாரியார்

உலகத்திலே சிறந்த செல்வம் படைத்தவர் சிலரும், வறுமையாகிய தீயின் மேல் கிடந்து வாடுகின்றவர் பலருமாக இருக்கின்றனர். இதற்கு என்ன காரணம்?

இறைவனை நினைத்து நல்ல விரதங்களை நோற்றவர் சிலர். விரதங்களை நோவாதவர் பலர். முற்பிறப்பில் நல்விரதமிருந்து இறைவனை வழிபட்டவர் இப்பிறப்பில் சகல செல்வ யோகமிக்க பெரு வாழ்வில் வாழ்வார்கள். அல்லாதவர் நல்குரவில் ஆழ்ந்து அல்லல்படுவர். இதனைத் தெய்வ புலவராகிய திருவள்ளுவர் தெரிவிக்கின்றார்,

இவர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோவா தவர்.

'இரைதேடுவதோடு இறையுந்தேடு' என்று பாம்பன் சுவாமிகள் கூறுவார். ஆகவே மனிதப் பிறப்பெடுத்த நாம் இப்பிறப்பை நமக்குத் தந்த தலைவனைக் குறித்து விரதங்களிருந்து வேண்டுதல் வேண்டும்.

எளிதிலே அருள்புரியும் மூர்த்தி கலியுக வரதராகிய கந்தக் கடவுள். தலையாய தேவாதி தேவர்க்கெல்லாம் தலையாய தனிப் பெருந் தலைவர். மாலயனுக்கு அரியான் - மாதவரைப் பிரியான் என்பார் அவரைப் பற்றி அருணகிரிநாதர். முருகப் பெருமானை நினைத்து நல்விரதங்களை யாற்றி வழிபாடு செய்தோர் எல்லா நலன்களையும் எளிதிற் பெறுவர்.

முருகவேளுடைய விரதங்களுள் தலையாய விரதம் கந்த சஷ்டி விரதம் ஆகும்.

சிவப்பெருமானுடைய விரதங்கள் எட்டு, அவற்றுள் தலையாயது சோமவார விரதம். அந்த அஷ்ட விரதங்களுள் ஒன்று தீபாவளி விரதம். இறைவன் ஜோதி வடிவானவன்.

''மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்''
''திருவையா றகலாத செம்பொற் சோதி''
''ஆதியும் அந்தமில்லா அருட் பெருஞ்சோதி''
''தீப மங்கள சோதி நமோநம''

என்பன வாதி தமிழ் வேத வசனங்களால் அறிக.

ஆகவே சிவபெருமானை உள்ளன்புடன் நினைத்து வரிசையாக விளக்குகளை வைத்து வழிபடுகின்ற விரதம் தீபாவளி.

தீபம்—விளக்கு, ஆவளி—வரிசை.

விளக்குகளை வரிசையாக வைத்துச் சிவபெருமானைத் தீபாவளியன்று வழிபட வேண்டும். இதன் பெருமையும் நோற்கும் முறையும் உபதேச காண்டத்தில் நன்றாக உரைக்கப்பட்டிருக்கின்றது. இவ்விரதத்தை உமையம்மையார் நோற்றனர்.

நரகாசுரனைக் கொன்ற காரணத்தால் கொண்டாடப்படுவது தீபாவளி என்பது பிழை. ஒரு அசுரனைக் கொன்றதற்காக ஒரு கொண்டாட்டம் இருக்க முடியாது. அப்படியானால் இரணியன், இராவணன். இடும்பன், பகன், சலந்தரன், அந்தகன் முதலிய அரக்கர்களைக் கொன்றதற்கும் கொண்டாட்டம் இருக்க வேண்டும். ஆகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரகாசுரனை வதைத்ததற்கும் தீபாவளிக்கும் தொடர்பு இல்லை என உணர்க.

தீபாவளி ஐப்பசித் திங்கள் தேய்பிறை சதுர்த்தசி திதியில் விரதம் இருக்க வேண்டும். அன்று உபவாசமாக இருந்து சிவ பெருமானை வழிபட வேண்டும்.

மறுநாள் அமாவாசையன்று பாராயணஞ்செய்ய வேண்டும்.

அதற்கு மறுமாள் வளர்பிறை பிரதமையிலிருந்து கந்தசஷ்டி விரதம் தொடங்க வேண்டும்.

பிரதமையன்று அதிகாலை எழுந்து நதியாயின் நீரின் எதிர்முகமாக நின்றும் கிணறு, குளங்களாயின் வடதிசை நோக்கி நின்றும் தண்ணீரில் அறுகோணம் வரைந்து அதில் சடாட்ஷர மந்திரத்தை எழுதி இடையே பிரணவத்தை எழுதி அத்தண்ணீரைச் சிவகங்கையாகப் பாவனை புரிந்து அதில் முழுகவேண்டும்.

பின்னர், கரையேறி தோய்த்து உலர்ந்த தூய ஆடைகளையுடுத்து அநுட்டானம் புரிந்து முருகவேள் திருக்கோயிலுக்குச்சென்று மலர் இட்டு விதிப்படி வலம் வந்து திருப்புகழ், திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தர் அனுபூதி இவைகளை ஓதி உள்ளம் உருகி ஒருமையுடன் வழிபட வேண்டும்.

இவ்வாறு ஐந்து நாட்கள் நோற்றபின் ஆறாவது நாள் சஷ்டியன்று, முன் கூறியபடி நீராடி சிறப்பாக ஜபதபங்களைச் செய்ய வேண்டும். அதிக பாராயணஞ் செய்து சிந்தனை முழுவதும் செவ்வேள் திருவடிக்கே செலுத்த வேண்டும். அன்றிரவு ஆறு காலங்களில் முருகன் திருவுருவத்திற்கு ஆயிரத்தெட்டு மந்திரங்களால் அருச்சனை புரிய வேண்டும். உறங்காமல் உணர்வுடன் குழைந்த உள்ளத்துடன் துதித்து வடிவேலிறையை வழிபட வேண்டும்.

மறுநாள் சப்தமி திதியன்று நீராடி வழிபாடு முடித்த பின் ஆறு அடியார்க்கு அன்னம் வழங்கி உணவு கொள்ள வேண்டும். அன்று பகலில் உறங்கக் கூடாது.

ஆறு நாட்களிலும் பூரண உபவாசமிருக்க முடியாதவர்கள் ஐந்து நாட்கள் பால் பழமுண்டு சஷ்டியன்று முழு உபவாசமாக இருக்க வேண்டும்.

இதுவும் மாட்டாதவர்கள் ஐந்து நாட்கள் உச்சிவேளையில் இறைவனுக்கு நிவேதித்த உணவையுண்டு இரவு பட்டினியாக இருந்து, ஆறாவது நாள் மிகவும் அன்புடன் உபவாசமாக இருந்து வழிபடவேண்டும். ஐந்து நாட்களிலும் படுக்கையில் படுக்கக் கூடாது. தூய பட்டு விரித்து அதன் மீது படுத்து இதயத்தில் முருகனை நிறுத்தி அகக்கண்ணால் நோக்கி தியானித்த வண்ணமாகவே உறங்க வேண்டும்.

இவ்வாறு சஷ்டி விரதம் இருந்தோர் மகப்பேறு முதலிய நலன்களையும் எளிதிற் பெறுவர். இவ்விரதத்தைப் பற்றிக் கந்த புராணத்தில் கூறுமாறுங் காண்க.

''வெற்பொடும் அவுணன் தன்னை
வீட்டியதனிவேற் செங்கை
அற்புதன் தன்னைப் போற்றி
அமரரும் முனிவர்யாரும்
சொற்படு துலையின் திங்கள்
சுக்கில பக்கந் தன்னில்
முற்பக லாதியாக மூவிரு வைகல்
நோற்றார்.''

முருகவேள் முழுமுதற் கருணை முன்னிற்க.

—★—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய நைமித்திகக் கிரியைகள்

ஆலயங்களில் தினமும் நடைபெறும் நித்திய பூஜைகள் ஆலயங்களின் வசதிக்கேற்ப ஒரு வேளை முதல் பன்னிரு வேளைகள் வரை நிகழும். திருச்செந்தூர் முதலிய தமிழகக் கோயில்களில் பன்னிரு வேளைகள் பூஜை நிகழ்கிறது. எங்கள் நாட்டில் வசதி படைத்த பல கோயில்களில் ஆறுகாலப் பூஜை நடைபெறுகிறது.

சூரியன் உதிப்பதற்குச் சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கு முன் நிகழவேண்டியது முதலாவது பூஜை. இது உஷத்கால பூஜை எனப்படும். இரண்டாவதாக நிகழும் காலை சந்திப் பூஜை, சூரியன் உதித்து மூன்று மணித்தியாலங்களுக்குள் நிகழும். உச்சிக் காலப் பூஜை நடுப்பகலுக்குரியது. சூரியன் மறைவதற்கு ஒன்றரை மணி நேரத்துக்கு முன் நிகழ்வது சாயரட்சைப் பூஜை (சாயங்காலப் பூஜை). இதன் பின் நிகழும் ஐந்தாவது பூஜைக்கு இரண்டாங் காலப் பூஜை என்று பெயர். சாயங்காலப் பூஜையிலிருந்து ஒன்றரை மணித்தியாலத்தின் பின் நிகழ்வது இது இரண்டாங் காலப் பூஜை நடந்து ஒன்றரை மணித்தியாலம் வரை அர்த்தயாமப் பூஜைக்குரிய காலமாகும்.

தொகுத்து நோக்கின் அதிகாலை நாலரை மணி, காலை எட்டு மணி, பகல் பன்னிரண்டு மணி, பிற்பகல் நாலரை மணி, மாலை ஆறு மணி, இரவு ஏழரை மணி ஆகியவை முறையே ஆறு காலப் பூஜைகளுக்கும் உரிய நேரங்கள் எனலாம்.

இந்த ஆறு வேளைப் பூஜை நடைபெறும் வசதி இல்லாத இடங்களில் காலைச் சந்தி, உச்சிக்காலம், மாலை என மூன்று வேளை அல்லது காலை, மாலை என இரண்டு வேளைகள் பூஜை நடைபெறும். மிகவும் வசதி குறைந்த சிறிய ஆலயங்களில் ஒரு வேளைப் பூஜை நடைபெறுவதும் உண்டு.

அதிகாலையில் நீராடி நித்திய கர்மாநுஷ்டானங்களை முடித்துத் தூய ஆடைகளும் விபூதி ருத்திராக்ஷமும் தரித்தவராக அர்ச்சகர் ஆலயத்தை அடைவார். திருநந்திதேவரையும் துவாரபாலகர்களையும் பிரார்த்தித்து அநுமதி பெற்று மண்டபத்தையடைந்து சகளீகரணம், பூதசுத்தி, அந்தர்யாகம் முதலியவற்றைச் செய்து பூஜைக்குத் தயாராகத் தம்மை ஆக்கிய பின் வைரவரின் ஆலயம் சென்று வணங்கி முதல் நாளிரவு அவரிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்த திறப்பினை அங்குச முத்திரையால் எடுத்து வந்து வாசலில் நின்று திருப்பள்ளி எழுச்சி முதலியன பாடித் துவார பூஜை நிகழ்த்திச் சிவ சக்தி மந்திரத்தை உச்சரித்தபடி கதவைத் திறப்பார்.

உள்ளே துப்புரவு செய்து நிர்மால்யம் களைந்து (அர்ச்சித்த பூக்கள் மாலைகளை அகற்றி) பாத்தியம், அர்க்கியம், ஆசமநீயம் ஆகியவற்றைக் கொடுப்பர். இதன் பின் முதலில் விநாயகர் பின்பு மூலவர் (மூலஸ்தானத்திலுள்ள பிரதான மூர்த்தி) அதன் பின் சக்தி ஆகியோரின் பூஜைகள் அபிஷேகம் முதல் தோத்திரம் வரை நிகழும். ஏனைய பரிவார தேவர்களுக்கு இவ்வேளையில் பெரும்பாலும் பூஜை நிகழ்வதில்லை. இவ்வேளையில் நைவேத்தியமாகப் பாலையே பயன்படுத்துவது மரபு.

காலை சந்திப் பூஜையில் சூரியன் தனிச் சந்நிதானத்தில் இருந்தால் அவருக்கே முதற் பூஜை நிகழும். இதன் பின் விநாயகர், மூலவர் ஏனைய பரிவாரங்கள் யாவருக்கும் விரிவாக அபிஷேகம் முதல் தோத்திரம் வரை பூஜைகள் நடைபெறும்.

உச்சிக் காலப்பூஜைக்கு முன் அர்ச்சகர் ''மத்யாஹ்நிகம்'' எனப்படும் உச்சிகாலத்திற்குரிய தமது நித்திய கர்மாநுஷ்டானங்களை முடித்த பின் விக்னேஸ்வர பூஜை முதல் சிவோகம் பாவனை வரையிலான பூர்வாங்கக் கிரியைகளைச் செய்து ஸ்நபன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்ப பூஜை செய்து பின்னர் அபிஷேக ஆராதனைகளை விரிவாக நிகழ்த்துதல் முறை. இதே போல ஏனைய மூன்றுகாலப் பூஜைகளும் நிகழும். இரவு அர்த்தயாமப் பூஜை நிறைவுற்றதும் ஆலயத் திறவு கோலை வைரவர் சந்நிதியில் வைத்துக் கோயிற் பாதுகாப்பை அவரிடம் ஒப்புவித்தல் வழக்கம்.

ஸ்நபன மண்டபத்திலே அமைக்கப்பட்டிருக்கும் ஓம குண்டத்திலே தினமும் அக்கினி காரியம் செய்தல் நித்தியாக்கினி காரியம் என்றும், ஆலய வீதியில் எட்டுத் திக்குகளிலும் அந்தந்தத் திக்குப்பாலகர்களான இந்திரன் முதல் ஈசானன் வரையானோர்க்கும் பத்ரலிங்கம் என்னும் பலி பீடத்திலே (கொடிமரத்திற்கருகிலுள்ளது) உரிய முறைப்படி அவ்வத் தேவர்களுக்கும் சாத உருண்டைகளைப் பலியாக வழங்கி மகிழ்வித்தல் நித்திய பலிதானம் என்றும் சொல்லப்படும்.

நித்தியோற்சவர் என்ற பெயருடன் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருக்கும் உற்சவ மூர்த்தியைத் தினமும் ஒருதரம் பூஜையின் முடிவில் வீதிவலம் வரச்செய்தல் நித்தியோற்சவம் எனப்படும். (இம்மூர்த்தி பெரும்பாலும் ஒருவர் அல்லது இருவர் தூக்கிச் செல்லத்தக்கதாக மிகச் சிறிதாக இருக்கும்).

இங்கு குறிப்பிட்ட நித்தியாக்கினி காரியம், நித்திய பலிதானம், நித்தியோற்சவம் என்பன வசதிபடைத்த சில கோயில்களில் மட்டுமே நிகழும். ஸ்நபனாபிஷேகம் போன்றவையும் அவ்விதமே.

ஆகம விதிப்படி அமையவேண்டிய பூஜைக் கிரமம் எது என்பதை பக்தர்கள் ஓரளவு அறிய வேண்டியதன் அவசியம் கருதியே இவை இங்கு விபரிக்கப்பட்டன. ஆயின், சந்தர்ப்ப சூழ்நிலைகள், இடம், பொருள் ஏவல்களுக்கேற்பவும் கால மாறுதல்களை அநுசரித்தும் இன்று இவற்றின் மிகச் சுருங்கிய வடிவத்திலேயே நித்திய பூஜைக் கிரியைகளை நாம் காண வேண்டியுள்ளது.

எப்படியிருப்பினும் தினமும் ஒரு தடவையாவது குறைந்த பட்சம் குளிர்ந்த நன்னீரை மட்டுமாவது தாராளமாகப் பயன்படுத்தி அபிஷேகம் செய்தல் அவசியமாகும். தீபாராதனையில் எல்லா வகையான தீபங்களையும் தினமுங்காட்டுதல் இயலாததெனினும் ஒற்றைத் தீபம், கற்பூரதீபம், பஞ்சாராத்திரிகை ஆகியவற்றை நிதானமாக நிறுத்தி ஒழுங்காகக் காட்டுவதும், தாராளமாகப் பூவினால் அர்ச்சித்து இயன்ற அளவு நாமங்களைக் கூறிப்பூஜை நிகழ்த்தலும் அவ்வாறே மிகவும் அவசியம்.

சுகந்ததூபம் இட்டு நைவேத்தியம் செய்த பின்னர் திரையை நீக்கித் தீபங் காட்டுதலும் அடுத்துக் கற்பூர தீபம் காட்டுதலும் அதையடுத்து அர்ச்சனையும் அதன் முடிவில் பஞ்சாராத்திரிகை அல்லது மீண்டும் ஒரு முறை கற்பூரதீபம் காட்டுவதும் மிகமிகக் குறைந்த அளவு கிரியையாகும். இவற்றையேனும் ஒழுங்காக நிறைவேற்ற முடியாத அல்லது விரும்பாத அர்ச்சகர்கள் ஆலயக் கிரியைகளில் பங்கேற்பது வருந்தத்தக்கதே.

**நைமித்திகக் கிரியைகள்:**

நைமித்திகம் என்பது விசேஷ கிரியையாகும். சுக்கிர வாரம் (வெள்ளிக்கிழமை), சோம வாரம் (திங்கட்கிழமை) முதலிய வாரந்தோறும் வருகின்றவையும், பிரதோஷம் முதலிய இரு வாரங்களுக்கொரு முறை வருபவையும், மாதப் பிறப்பு, கார்த்திகை, சதுர்த்தி, பூரணை முதலிய மாதமொரு முறை வருவனவும் நடேசரபிஷேகம் ஆகிய இரு மாதங்களுக்கொரு முறை வருபவையும், ஆடிப்பூரம், ஆவணிமூலம், கந்தசஷ்டி, நவராத்திரி ஆகிய வருஷமொருமுறை வருபவையும், கிரகண பூஜை, மகாமகம் போன்ற பல வருடங்களுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொருமுறை வருபவையுமென்று நைமித்திகக் கிரியைகள் பலவகைப்படும். பிரதிஷ்டை என்னும் கும்பாபிஷேகமும் நைமித்திகமே.

இவை, குறிப்பிட்ட தினங்களில் அவ்வவ்வற்றுக்குரிய மரபு முறைப்படி விசேஷ அபிஷேகம், பூஜை, விசேஷ அர்ச்சனை, உற்சவம் முதலிய அம்சங்களைக் கொண்டவையாக அமையும்.

காமியக் கிரியைகள்:

ஏதாவது பிரத்தியேக நற்பலன்களை விரும்பி நாம் செய்கின்ற கிரியைகள் காமியக் கிரியைகளாகும். நமது குறிக்கோள் நிறை வேற வேண்டு மென்னும் எண்ணத்துடன் நித்திய நைமித்திகங்களைச் செய்வித்தலும், ருத்ராபிஷேகம், ஸ்நபனாபிஷேகம் போன்றவற்றைச் செய்வித்தலும் காமியக் கிரியைகள் எனப்படும்.

பிரதி பலனை எதிர்பாராது நம்கடமை இதுவென எண்ணிக் கிரியைகளை நடத்துவதே சிறப்பு. எனினும் லௌகீக வாழ்வில் ஈடுபட்டுள்ள சாதாரண ஆன்மாக்களாகிய நாம் எமது ஆசைகள் பூர்த்தியடையும் பொருட்டு இக்கிரியைகளை நடத்துவித்தல் தவறல்ல. முறையாகவும் பக்தியுடனும் இவற்றை நடத்தி, அதன் பெறு பேறுகள் யாவும் சிவார்ப்பணமே யென்றெண்ணிச் சமர்ப்பித்தல் உயர்ந்த பக்குவ நிலைக்கு நம்மை வளர்க்கும்.

'சைவாலயக் கிரியைகள்'
எனும் நூலிலிருந்து

## அங்காரகன்

இவன் மங்களன், குகன், ஆரல், செய்வாய் முதலிய வேறு பெயர்களைக் கொண்டவன். இவன் நவக்கிரக மண்டலத்தில் மூன்றாவதாக விளங்குகிறான். நவக்கிரக வழிபாட்டில் சூரியனுக்குத் தெற்கே இவனை மந்திர முறையால் அமர்த்தி வழிபடுவது மரபு. உடல், உடை, மாலை முதலியன சிவப்பாய் இருத்தலின் செவ்வாய் செம்மீன் எனத் தமிழில் குறிக்கப்பட்டுள்ளான். வானில் இவன் தோற்றத்தை ''முந்நீர் நாப்பண் திமில் சுடர் போலச் செம்மீன் இமைக்கும் மாக விசும்பின்'' என்று புறநானூறு (60) குறிப்பிடுகிறது. நிலமகளால் வளர்க்கப் பெற்றவனாதலின் இவன் நிலமகளின் மகனாகக் குறிக்கப் பெறுகிறான். குகன், தராசுதன், பௌமன் என்பனவும் அக் காரணம் பற்றி இவனுக்கு அமைந்த பெயர்களாகும்.

உமை இறைவனை நீங்கியிருந்த காலத்தில் இறைவன் யோகத்தில் இருந்தார். அப்போது நெற்றிக் கண்ணில் வேர்வை அரும்பி நிலத்தில் விழுந்தது. அதிலிருந்து அங்காரகன் தோன்றி நிலமகனாய் வளர்க்கப்பெற்றான். அவன் கடும் தவம் செய்ய அத்தவ மிகுதியால் உடம்பில் யோகாக்கினி தோன்றியது. அத் தவப் பயனாகக் கிகர நிலை எய்தினான்.

தக்கன் செய்த யாகத்தினை அழித்த வீரபத்திரர் மூவுலகையும் அழிக்க முற்பட்ட போது தேவர்கள் வேண்டுகோளுக்கிணங்கத் தன் உருவினை மாற்றி அழகிய அங்காரகனாத் திருமேனி பூண்டதாக மச்ச புராணம் கூறுகிறது.

அங்காரன் நான்கு அருட் கைகளையுடையவன்; செம்மலரும் செவ்வுடையும் செம்மேனியுஞ் செவ்வாயுங் கொண்டவன்; வலக் கைகளில் அபயமும் சக்திப்படையுமுடையவன்; இடக் கைகளில் சூலமும் கதையும் கொண்டவன்; செம்மறியை ஊர்தியாகக் கொண்டவன்; செங்கொடியும் குடையும் உடையவன். சித்திரை, முதல் செவ்வாயில் இவனைச் சிறப்பாக வழிபடுவது மரபு.

ஆதாரம்: வாழ்வியற் களஞ்சியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சியும் திருவெம்பாவையும்

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

''போற்றியென் வாழ்முத
லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற்
கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத்
தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின்
திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண்
வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை
சிவபெரு மானே
ஏற்றுயவர் கொடியுடை
யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி
யெழுந்தரு ளாயே.''

திருவாசகத்தில் அமைந்துள்ள பதிகங்களில் திருப்பள்ளியெழுச்சியும் திருவெம்பாவையும் அருட்சுவையோடு பொருட்சுவையும் சொற்சுவையும் மிகுந்த பாடல்களைக் கொண்டனவாகும். பள்ளி எழுச்சி என்பது துயிலெழும்புதல். மாணிக்கவாசகர் பாடிய திருப்பள்ளியெழுச்சியே முதன் முதலாக வெழுந்த திருப்பள்ளியெழுச்சிப் பாசுரமாகும். இது திருபெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது. இறைவனைத் துயில் உணர்த்துகின்றோம் என்றால் அதன் பொருள் யாது? ஞானசொரூபிக்கு உற்சாகமும் விழிப்பும் உண்டா? எனவே ஆண்டவனைத் துயிலுணர்த்துவான் போல் நம்மை நாமே துயிலுணர்த்திக் கொள்வதாகும். திருப்பள்ளி யெழுச்சியின் உட்கிடை 'திரோதான சுத்தி' எனக் குறிக்கப்பட்டதும் நினைக்கற்பாலது. அ.'.தாவது உயிர்களின் மல மறைப்பை நீக்குதல். சங்கார காலத்தில் ஒடுங்கிய உயிர்களுக்கு மீளவும் பக்குவம் வருதற் பொருட்டு இறைவன் ஐந்தொழில் செய்யத் தொடங்கும் அவதாரமே திருப்பள்ளி யெழுச்சியாகும்.

திருவெம்பாவை யென்பதும் ஆதியும் அந்தமுமில்லா எம்பெருமானின் அருட்சக்தியை வியந்து கூறப்பட்ட பாசுரமாகும்: மார்கழி மாதம் மதிப்புக்குரிய மாதம். இறையன்பில்எம்மை ஈடுபடுத்தும்இயற்கை நிலை இம்மாதத்திலுண்டு. சிவனுக்குரிய திருவாதிரைத் திருநாளும் இம் மார்கழியிலேயே வருகிறது. திருஞானசம்பந்தர் பூம்பாவையை எழுப்புகின்றபோது ஆதிரை நாட் பெருமையைத் திருப்பதிகத்தில் அமைத்துப்பாடிள்ளார். ஆதிரைக்கு முந்திய பத்து நாட்களும் நீராட்டு நாட்களே; இவை சிறப்பாகப் பெண்களுக்கே உரியன. இல்லறத்தாற் கிடைக்கக்கூடிய இம்மை மறுமைப் பயன்களை ஆடவரும் பெண்டிரும் ஒன்று பட்டு வாழும் வாழ்க்கையாற்றான் பெற்றுக் கொள்ளலாம். மண வாழ்க்கை ஏற்பட்டு விட்டாற் பின்பு அதனை மாற்றிவிட முடியாது. அதனாற்றான் பெண்கள் இந்த நோன்பை அநுட்டித்து நல்ல மணவாழ்கைக்கு வரம் கேட்கிறார்கள். சங்க காலப் பாடலொன்றில் தைநீராடிப் பெருவரம் பெற்ற செய்தியொன்று குறிப்பிடப் பெற்றுள்ளது. ஒரு பெண் தான் விரும்பிய தலைவனை அடைவதற்காகத் ''தைத்திங்கள் தண்கயம் படிந்தாள்'' என்பது நற்றிணைப் பாட்டு. பரிபாடலில் கதிரவன் கடுகிக் காயாத மார்கழி ஆதிரைக் கண் இறைவனுக்கு மழை வேண்டி விழா எடுத்தனர். பண்டைத் தமிழர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னே வரும் வேனில் வெப்பத்தால் வியன் ஞாலங் கருகாது வளம் பல சுரக்க மழை வேண்டுமென்று நீராடிய செய்தி அப்பாடல்களிற் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஞாயிறு காயா நளிமாரி
யிற் குளத்து
மாயிருந் திங்கள் மறுநிரை
யாதிரை
விரிநூ லந்தணர் விழவு
தொடங்க
வெம்பா தாக வியன்நில
வரைப்பென
அம்பா ஆடலின் ஆய்தொடிக்
கன்னியர்
முனித்துறை முதல்வியர்
முறைமை காட்டத்
தாயொடு நின்று தைநீ
ராடுதல்"

பிற்காலத்து இதுதான் மார்கழி நீராடல் எனப்பட்டது. இதற்குக் காரணமும் உண்டு. அக்காலத்தில் மார்கழி இறுதிப் பகுதியிற்றான் திருவாதிரை நாள் வருவது வழக்கம். அதனால் தை நீராட லென்று கூறினர் போலும்.

சமய வாழ்க்கைக்கு அடியாரிணக்கம் மிக அவசியமாகும். உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம், உன்னடியார் தாள் பணிவோம். ஆங்கவர்க்கே பாங்கா வோம். அன்னவரே யெம்கணவ ராவார்' என்பதால் சமய வாழ்வில் ஒத்த கருத்துள்ள குடும்பங்கள் நம்நாட்டில் நிலை பெற வேண்டுமென்று அடிகள் விரும்பினார். பெண்களெல்லாரும் மார்கழித் திங்கள் தோறும் வெள்ளி யெழமுன்னெழுந்து வீடுவாசல் பெருக்கி மற்றவரையு மழைத்துக் குளித்து தூய உள்ளத்தோடு வழிபாடாற்றுவர். ஊர் வம்பு பேசார்; ஆண்டாள் பெருமாட்டி இதனை அழகாகக்கூறுகிறார்.

"நெய்யுண்ணோம் பாலுண்ணோம்
நாட்காலை நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்
முடியோம்;
செய்யா தனசெய்யோம்; தீக்குறளை
சென்றோதோம்."

திருவண்ணாமலையில் அடிகள் தங்கி காலத்திற் பெண்களெல்லாரும் ஒருவரை யொருவர் துயிலெழுப்பி ஏதோ நாட்டுப் பாடல்களைப் பாடிக்கொண்டு செல்வதைக் கண்ட மாணிக்கவாசகர் உள்ளத்தில் ஒரு ஞானக்காட்சி பரிணமித்தது. இதுவே பாவைப் பாட்டாக வெளிவந்தது.

"மாதர்கொண் மாதரெல்லாம்
மார்கழித் திங்கள் தன்னில்
ஆதிரை முன்னீ ரைந்தே ஆகிய
தினங்கள் தம்மின்
மேதகு மனைகள் தோறும்
அழைத்திருள் விடிவ தான
போதிவர் தம்மிற் கூடிப் புனற்றட
மாடல் செய்யார்"

"அன்னவ ரியல்பு கண்டார் ஆங்கவர் புகன்றதாக மன்னிய திருவெம்பாவை வாசகம் பேசி" எனக் கடவுள் மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணத்திற் காட்டியுள்ளார்.

திருவெம்பாவையிற் பாடப்பட்ட பெண்களின் உரையாடல் ஒன்பது பேருக் கிடையே நடைபெறுகிறது. ஒன்பதாம் பாடலிலிருந்து இருபதாம் பாடல் வரை பெண்களெல்லோரும் சேர்ந்து பாடிய தன்மை காட்டப்பட்டுள்ளது. பத்தாவது பாடலிலே இறைவனின் ஒப்பற்ற முதன்மையைக் காணலாம். அவன் பாதங்கள் பாதாள மேழினுங் கீழ்ச் சென்று சொற் பதத்தையுங் கடந்து நின்றவை யெனவும் அவன் முடி எல்லாப் பொருள்களின் முடிவையுங் கடந்து அப்பாலுள்ளதெனவும் திருமேனி ஒன்றல்லனென்னவும், ஓத உலவா ஒரு தோழனெனவும், பெயர் ஊர் கிளையற்றவனெனவும் இறைவனின் சொரூப லட்சணத்தை அப்பாடலில் காட்டியுள்ளார். பதினைந்தாவது பாடலிலே இறைப்பித்துக் கொண்ட ஒரு பெண்ணியல்பை வர்ணிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓரொருகால் எம்பெருமான்
என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள்
சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை
கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள்
விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே
பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம்
ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர்
வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்
தாடேலோர் எம்பாவாய்.''

என்பது அப்பெண்ணை வர்ணிக்கும் திறமாகும். இதிலிருந்து இறையுணர்விலே நின்று சிவபோதம் கைவரப் பெற்றவர்கள் ஞானச் சார்பன்றி ஊனச்சார்பொன்றையும் உணரமாட்டார்கள் என்பது வெளிப்படை. பத்தொன்பதாவது பாடல் அடைக்கலப் பாடலாக அமைந்துள்ளது பெண்கள் எல்லாம் கூடி 'உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கல' மென்று குரலெழுப்புகிறார்கள், அப்படி யெழுப்பும்போது அச்சமும் ஒருபுற முண்டாகிறது. இறைவனுக்கிது தெரியாதா? புதுமையாக இதைச் சொல்ல வேண்டுமோ என்று அவர் கருத்திற்பட்டாலும் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டுமென்ற ஆசை மேலெழுகின்றது. ஆசையினால் தமது வேண்டுகோள்களை விடுகின்றார்கள் ''இறைவா! நாங்கள் உனது அடைக்கலம். எங்களுக்கு நீயே துணை. உமது அடியார்களே எமது கணவர்கள். எமது கைகள் உமக்கே திருப்பணி செய்யவேண்டும். எமது கண்கள் உமது திருக்காட்சியையே காண வேண்டும். இந்த நிலை நமக்குக் கிடைத்தால் எமக்கு வேறு உலகியல் ஆராய்ச்சிக்கு இடமில்லை'' என்பது அவர்கள் வேண்டுதல்களாகும். இறைவனே தமது பிதா என்றும் அவரே தம்மை யாருக்காவது கொடுக்க உரிமையுடையவரென்றும் கூறிக் கூறி அவர்கள் களிப்படைவதிலிருந்து இறைவனை முன்னிட்டு நடத்தும் இல்லறம் நல்லறமாகக் கழியுமென்ற உண்மை புலனாகிறது. பாவை நோன்பின் அடிப்படைக் கொள்கையும் இதுவே.

இறுதிப் பாடலில் இறைவனின் ஐந்தொழில் விளையாட்டுக்கள் கூறிப் போற்றிப்பாவைப் பாட்டை முடிவு செய்கிறார். பாடல் முழுவதிலும் அம்பலவாணன் புகழே கூறப்படுகிறதென்பதற்குச் சான்றாக மூன்றிடத்திற் ''சிற்றம்பலம்'' என்றசொல் அமைந்துள்ளது. 'சீதப் புனலாடிச் சிற்றம் பலம் பாடி' என்பதும் 'நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங் கூத்த' னென்பதும், தேசன் சிவலோகன் தில்லைச்சிற்றம், பலத்தில் ஈசனார்க்கன் பார்யா' மென்பதும் அத்தொடர்களாம். திருவாதிரை நாளில் சிதம்பர நடராஜப் பெருமானுக்குச் சிறப்பான பூசைகளும் ஆருத்ரா தரிசன மென்னும் சிறந்த அருட்காட்சியும் எடுக்கப் படுகிறது. இதனாற்றான் ஆதிரை விழாவைக் காண ஆசைப்பட்டார் திருநாளைப் போவார்.

காலத்தோடொட்டியும் மார்கழிக்கு ஒரு சிறப்புண்டு. எங்கும் குளிர்; சிறு சிறு மழைத் தூற்றல்; பசும் புல்லடர்ந்து பச்சைப்பசேலென்ற காட்சி. சிறு மழையும் குளிர்ப் பனியும் உள்ளத்தையும் உடம்பையும் அமைதிப்படுத்தும் சிவத்தைத் துயில் எழுப்புவது போல் திருப்பள்ளியெழுச்சியிலும் சித்தத்தையே துயில் எழுப்புகிறார் மாணிக்கவாசகர். துயிலுணர்ந்த ஆன்மா மல நீக்கத்துக்காகத் திருவருள் நீரிற்படிகிறது. அதனால் தூய்மை அடைகிறது. தூய்மையான நிலையில் இறைவனை வேண்டி நிற்கும் வரங்களே மேற்காட்டியபடி பத்தொன்பதாவது பாடலில் அமைந்தவையாகும். திருப்பாவையிலும் ஆண்டாள் பெருமாட்டி வேண்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சின்னஞ் சிறுகாலே வந்துன்னைச்
சேவித்து உன்
பொற்றா மரையடியே போற்றும்
பொருள் கேளாய்
பெற்றும்மேய்த் துண்ணுங் குலத்தில்
பிறந்து நீ
குற்றேவ லெங்களைக் கொள்ளாமற்
போகாது
இற்றைப் பறைகொள்வா
னன்று காண் கோவிந்தா
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும்
உன்றன்னோ
டுற்றோமே யாவோ முனக்கேநா
மாட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ
ரெம்பாவாய்.''

கண்ண பிரானைப் போற்றிய திறனும் அவனுக் காட்பட்ட செயலும் திருப்பாவையில் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. ''பாவை'' என்பது பரம்பொருளைப் பாவையர் பாடிய பகுதி எனவும், 'பாவாய்' எனவிளித்துப் பாடிய பகுதி எனவும் கருத்துணர்த்தி நிற்கிறது. நாட்களில் வைகறைப் பொழுதும் வருடத்தில் மார்கழி மாதமும் மன அமைதிக்குரிய காலமாகும். இதனாலேயே ''வைகறை யாமந் துயிலெழுந்து'' தத்தங் கடமைகளைச் செவ்வனே யாற்றினர் முன்னோர். இதே அமைதியை மார்கழி மாதத்திற் கண்டு நோன்பு அனுட்டித்துப் பாரினை உய்யக் கொள்கிறார்கள் பக்தர்கள். சக்தியின் தொழிற்பாட்டுக்குரிய காலமுமிதுவே. சக்தியின் வியாபரித்தலால் ஐந்தொழில்களும் நடைபெற ஆரம்பிக்கும் காலமிதுவே. இதனாலேயே 'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன் பாதத்திறம் பாடியாடேலோ ரெம்பாவாய் எனப் பாடினார் மாணிக்கவாசகர். சக்தி வெளிப்பட்டாலன்றி உலகுக்கு உய்வு கிடையாது. படைத்தலுக்கு ஆயத்தமாகும் போது இறைவன் சக்தியைச் சேருகிறான். இதனை அடிப்படையாக வைத்தே பாவைப் பாடல்கள் எழுந்தன. எனவே ஆணவ இருளில் அல்லற்பட்டு நான் எனது என்ற பற்றில் மயங்கி நெறி திறம்பிச் சென்று கொண்டிருக்கின்ற எம்மனைவரையும் நெறிமாற்றி இருளகற்றித் துயிலுணர்த்தி ஞானமூட்டி வழிகாட்டுவன இப்பாடல்களே. இவற்றை அவ்வக் காலங்களில் ஓதியுணர்ந்து உய்தியடைவோமாக.

மலேசியா, சிங்கப்பூர் சுற்றுப் பிரயாணச் சொற்பொழிவுகள் எனும் நூலிலிருந்து.

## தீர்த்த யாத்திரை

தீர்த்த யாத்திரையும் தவத்தை ஓரளவிற்கு நிகர்க்கும். இங்கு பல நியமங்களுண்டு. இந்திரியநுகர்ச்சிக்கு இன்பம் பயக்கும் பெருள்கள் இவ்வேளை வெறுத்தொதுக்கப்பட வேண்டியன. யாத்திரையை மேற்கொள்ளுபவன் கை, கால், மனம் முதலியவற்றைக் கட்டுப்படுத்தியும், தவவொழுக்கம் மேற்கொண்டும், புகழை வெறுத்தொதுக்கியும், இருத்தல் வேண்டும். இவன் தானம் ஏற்றல் கூடாது; புலன்களை யடக்கல் வேண்டும்; வரைந்து உணவு கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு நியமங்களைக் கடைப்பிடிப்பவன் தீர்த்தயாத்திரையால் வரும் பயன் முழுவதையும் பெறுகின்றான்.

தீர்த்தங்கள் நீர்க்கரையினையண்டியே விளங்குவதனால் அவை ஆறாகவும், குளமாகவும், கடலாகவும் இருக்கலாம். இங்கு நீராடுவது தீர்த்த யாத்திரையின் முக்கியமான அம்சம். இவ்வாறு நீராடுதலே பாவமனைத்தையும் போக்கும். நீர்க்கரையில் நிறுவப்பட்டு விளங்கும் இலிங்கங்களை வழிபடுதல் தீர்த்தயாத்திரையில் அடுத்தாற்போல் நிகழும் கிரியை. இவ்விலிங்கங்களில் இறைவன் எப்பொழுதும் சாந்நித்தியமாக இருப்பான் என்பன புராணங்கள்.

தீர்த்தயாத்திரை பெரும் பயன் விளைவிக்கும். தீர்த்தங்களை மனதால் நினைத்தாலே பெரும் புண்ணியம் பயக்கும். அவற்றைத் தரிசித்தல் பாவங்களைப் போக்கும். இகழத்தக்க பெரும் பாவம் புரிந்தோருக்கும் இங்கு தீர்த்தமாடல் பாதகங்களை யழிக்கும். இங்கு எழுந்தருளியிருக்குந் தெய்வங்களை மனதால் தியானிப்பவர் அவற்றின் அருளினைப் பெறுவர். அங்கு நீராடுபவர் தம்மெண்ணம் கைகூடியவராவர், புத்திரப்பேறு, வீடுபேறு, பாவமழிதல் முதலியனவே இவர்கள் அவாவுவன. சுருங்கச் சொல்லின் இம்மை, மறுமை, இரண்டிற்கும் வேண்டிய இன்பங்களை இவர் பெறுவர் எனலாம் முன்னர்க் குறிப்பிட்டவாறே யாகஞ் செய்வதனாலீட்டும் பெரும் பலனைத் தீர்த்த யாத்திரை செய்து மக்களடைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைவிழா மலர் வெளியீடு



தமிழ்க்கலைவிழாவை ஒட்டி பிரசுரிக்கப்பட்ட சிறப்புமலரை, கலாசார சமய விவகார பிரதி அமைச்சர், பேராசிரியர் ஏ. வி. சுரவீர அவர்கள், தமிழகத்தைச் சேர்ந்த டாக்டர் இரா. இராசு அவர்களிடம் கையளிப்பதையும் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. கா. தயாபரன், கூட்டத்திற் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.

## கலையரங்கு



இரண்டாம் நாள் கலையரங்கு நிகழ்ச்சிகளில் மட்டக்களப்பு விபுலானந்த இசைநடனக் கல்லூரி மாணவியரின் நடனக் காட்சி ஒன்றையும் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வர்த்தக, வாணிப, உணவுத்துறை பிரதி அமைச்சர் மாண்புமிகு பி. சந்திரசேகரன், சிறப்பு விருந்தினர், பிரதி, தபால் தந்தித் தொலைத் தொடர்புகள் அமைச்சர் மாண்புமிகு எம். எம். ஏ. எம். ஹிஸ்புல்லா மேலதிகச் செயலாளர் திரு. கா. தயாபரன் ஆகியோர் கூட்டத்தில் அமர்ந்திருப்பதையும் படத்திற் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்குள்ள நூல்கள்

| | |
|---|---|
| ஈழத்துச் சித்தர்கள் (ஆத்மஜோதி நா. முத்தையா) | ரூ. 56.00 |
| இலங்கையின் இந்துக் கோயில்கள் (பதிப்பாசிரியர் சி. பத்மநாதன்) | ரூ. 100.00 |
| கோணேசர் கல்வெட்டு (பதிப்பாசிரியர் இ. வடிவேல்) | ரூ. 60.00 |
| திருவாசக ஆராய்ச்சியுரை (சு. அருளம்பலவாணர்) | ரூ. 190.00 |
| யாழ்ப்பாண சரித்திரம் (முதலியார் செ. இராசநாயகம்) | ரூ. 487.50 |
| தஞ்சைமராட்டியர் மன்னர் வரலாறு | ரூ. 304.50 |
| திருவருட்பா இசைமாலை (சங்கீத கலாநிதி டி. எம். தியாகராஜன்) | ரூ. 75.00 |
| திருக்கோவையார் (பழைய உரையும், புதிய விளக்கமும்) | ரூ. 250.00 |
| திருவிளையாடற் புராணம் (அருஞ்சொற் பொருளுடன்) | ரூ. 187.50 |
| முல்லைப் பாட்டு (விளக்கவுரையுடன்) | ரூ. 20.00 |
| மதுரைக்காஞ்சி (விளக்கவுரையுடன்) | ரூ. 75.00 |
| தாயுமான சுவாமிகள் திருப்பாடல் (மூலமும் பொழிப்புரையும்) | ரூ. 200.00 |
| பாரதியார் எழுத்துக்கள் சில புதிய கண்டுபிடிப்புகள் | ரூ. 27.50 |
| படைப்பியல் நோக்கில் தமிழ் இலக்கியம் | ரூ. 90.00 |
| கல்வி உளவியல் கோட்பாடுகள் | ரூ. 162.50 |
| பழந்தமிழர் கட்டிடக் கலையும் நகரமைப்பும் | ரூ. 75.00 |

இவற்றுடன் ஆன்மீக, தமிழ்த்துறை சார்ந்த நூல்கள், திணைக்கள வெளியீடுகள் என்பன திணைக்கள விற்பனை நிலையத்தில் விற்பனைக்குள்ளன. காரியாலய நாட்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

Printed by: RAJAN PRINTERS, Colombo-2. T. P. 687800

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org